


குமரகோட்டம் கலைநகர் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். காங்கேயநாதன் . விமலராணி

அவர்களின் அமரத்துவம் குறித்து வழங்கும்

# ஞான தீபம்

## நினைவு அமுதம்

25.03.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்.



குமரகோட்டம் கலைநகர் சித்தன்கேணியைப்
பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்
கொண்ட

அமரர். **காங்கேயநாதன் . விமலராணி**

அவர்களின்

அமரத்துவம் குறித்து வழங்கும்

# ஞான தீபம்

25.03.2010

நல்ல சங்கீதத்தை இரசியுங்கள் வாழ்கையில்
சந்தோஷமான பக்கத்தைப் பாருங்கள்

நல்ல அறிவு எந்த மூலையில் எவ்வளவு தூரத்தில்
இருந்த போதிலும் அதைத் தேடிச் செல்.

மலராக்கம்
சைவப்புலவர்.
மா.கணநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு

# ஸமர்ப்பணம்.

அன்பிற்கோர் இருப்பிடமே.
ஆற்றலுக்கோர் ஆணிவேரே.
இன்பத்திற்கோர் உறைவிடமே.
ஈகைக்கோர் இசைவாணியே.
உரிமைக்கோர் உடன்பிறப்பே.
ஊருக்கோர் உத்தமியே.
எம்மவர்க்கோர் பெருந்தகையே.
ஏற்றத்திற்கோர் ஏணிப்படியே.
ஐங்கரனுக்கோர் அடியவயே
ஒப்புரவுக்கோர் உயர்ந்தமியே
ஓடமாகியெமைச் சுமந்தவரே.
ஔடதமாகிய எம்தாயே..

நாளும் பொழுதும் எம்நலம்பேணி இல்வாழ்வின் இனிய வழிகளை அறிந்து
என்றும் இனிதாய் வாழ்ந்து எல்லோர் மனதிலும் இடம் கொண்டு
சைவசமயத்தின் மேன்மையை உணர்ந்து
முருகையாப் பெருமானின் திருப்பாதங்களை கணமும் மறவாது கணவனைக்
கண் கண்ட தெய்வமாகக் கொண்டு விசாலாட்சி சமேத காசி விசுவநாதப்
பெருமானனைப் போற்றி பேரருள் பெற்ற

அமரர் **காங்கேயநாதன் — விமலராணி**

அவர்களின்

## "ஞான தீபம்"

எனும் நினைவு அமுதமாம் பொன் மலரை
புன்னகை தவழும் பொழில் வதனமுடைய புனிதரில்
பொன்னடிக் கீழ் வைத்தோம்.
அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
பொறுமையின் பொக்கிஷமாய் வீற்றிருந்த
எங்கள் அன்புத் தெய்வத்தை அடுத்த பிறப்பு உண்டாயின்
பிள்ளைகளாய்,பேரர்களாய்,மருமக்களாய், சகோதரிகளாய்,
மைத்துணர்களாய்.........................................அடைவதற்கு
வட்டுக்கோட்டையிலிருந்து திருவருள் பாலிக்கும் முருகையாப் பெருமானின்
திருப்பாதங்களைப் போற்றி வேண்டுகின்றோம்,

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு



மண்ணக வாழ்வு
28 . 01 . 1942

விண்ணக வாழ்வு
21 . 02 . 2010

அமரர்

# காங்கேயநாதன் விமலராணி

அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டுநல் விரோதியில் ஆங்கனுறு மாசிதனிற்
ஈண்டும் புகழ்பூர்வ அட்டமியில் - நீண்டபுகழ்த்
திருநாள் தேடிவரத் துய்யவிம(ல) ராணியார்
தேருபதம் உற்றார் அறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பஞ்சபுராணம்



## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

முக்கணா போற்றி முதல்வா போற்றி
முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி
தக்கணா போற்றி தருமா போற்றி
தத்துவனே போற்றி என்தாதாய் போற்றி
தொக்கணா வென்றிருவர் தோள்கை கூப்புத்
துளங்கா தெரிசுடராய் நின்றாய் போற்றி
எக்கண்ணுங் கண்ணிலேன் எந்தாய் போற்றி
எறிகெடில வீரட்டத் தீசா போற்றி

## திருவாசகம்

முத்தனே முதுதல்வா முக்கண்ணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அந்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

## திருவிசைப்பா

மாலுலா மனம்தந்து என்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தன்என் சேந்தன்
என்னும்என் மெல்லியள் இவளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்
எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யுஞ் சிவம் சீர்
அடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந் தாண்டு கொண்டாரு யிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே.

# திருப்புராணம்

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும் இனியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந்தருளப் பெற்றபே றிதனால் என்றைக்கும் திருவளருடையோம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியில் விளங்கும் மேன்மையும் படைத்தனம் என்றார்

# திருப்புகழ்

காரண மாக வந்து புவிமீதே
காலனணு காதிசைந்து கதிகான
நாரணனும் வேதன்முன்பு தெரியாத
ஞானநட மேபுரிந்து வருவாயே
ஆரமுத மானதந்தி மணவாளா
ஆறுமுக மாறிரண்டு விழியோனே
சூரர் கிளைமாளவென்ற கதிர்வேலா
சோலைமலை மேவிநின்ற பெருமாளே

திருச்சிற்றம்பலம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

வந்தனை செய்திடுவோம் – வேலவனை
வந்தனை செய்திடுவோம்

வரமீயும் வட்டூர் வெப்பட்டி யொல்லை
முருகையனைச் செந்தில் ஆண்டவனை நீத்தம்

(வந்தனை.....)

சோலையில் வண்டினம் தேனாடி நின்றிட
காலையிற் கதிரவன் கடலாடி வந்திட

(வந்தனை.....)

மலையாடி முருகையன் அருளாடி வருவான்
அலைபாயும் அடியவர்க்கு அருளமு தீவான்

(வந்தனை.....)

பூதிசிவ சின்னம் பொலிந்திட எண்ணிக்
குருவாகக் கனவிலே தோன்றி அருளி
வருவெனச் செந்தூர்க் கழைத்தே வெள்ளி
அரியதொருவே லோய் அவர்கரத் தமர்ந்தானை

(வந்தனை.....)

மாத வெள்ளியில் மகேஸ்வர பூசை
நாத மணியுடன் நாள் தொறும் பூசை
பூத கணங்களின் நடுநிசிப் பூசை
ஓது பலபூசை காணும் ஐயனை

(வந்தனை.....)

பட்டினி கிடந்து பாவையர் நோற்கச்
சட்டியில் வைத்து அகப்பையில் கொடுப்பீர்
மட்டிலா இன்பம் மக்கள் பெறுவர்
செட்டியார் செய்யும் ஆடலைக் காண

(வந்தனை.....)

தீயோ ராயினும் திருத்தலம் சேர்ந்தால்
நாயகன் முருகன் நல்லவ ராக்கி
தூய நெறியினில் தொடரச் செய்வான்
தாயினும் நல்ல தலைவன் தானே

(வந்தனை.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டை வெப்பட்டிஒல்லை செந்தூர் முருகையாப் பெருமான் திருவூஞ்சல்

*காப்பு*

திருவளரும் வட்டூர் வெப்பட்டி ஒல்லை
திகழ்ந்தோங்கச் செந்தூரில் தவங்கிடந்து
பெருகியபே ரன்பர்திருத் தம்பர் வேண்ட
பேறளிக்கும் அருள்வேலையீந்த ருள்செய்
திருமுருகன் மீதடியேன் ஊஞ்சல் பாடத்
தினைப்புனத்தில் தம்பிதனக்காய னைந்த
கருணைபொழி பிரணவமோர் வடிவமாகும்
கணபதிதன் கழலிணைகள் காப்ப தாமே.

ஆதிபர நாதவிந்து கால்களாக
அருளாரும் சத்திமணி விட்டமாக
வேதமறை மந்திரங்கள் கயிறதாக
மெய்ப்பொருளாம் பிரணவமே பலகையாக
சோதிமுக மகிழ்வினொடும் இனிதே யேறிச்
சுரிகுழன்மா தர்இருவர் பாகம் மேவ
மாதுமையாள் பாலகனே வட்டூர்மேவு
மன்னுவெப்பட்டிவேளே ஆடீர் ஊஞ்சல் 01

செங்கமலத் திறையோடு செங்கண் மாலும்
சிந்தைகளி கூர்வினொடும் வடந்தொட்டாட்ட
மங்கையுமை எந்தையொடும் ஆசி கூற
மலர்மகளும் கலைமகளும் இசைகள் பாட
பங்குலவு வள்ளிதெய்வ யானை யோடு
பாருயிர்கட் கருள்சொரியும் பாதமுன்னி
தெங்குலவு வட்டூர் வெப்பட்டி ஒல்லைத்
திருமுருகா அருளுருவே ஆடீர் ஊஞ்சல் 02

இந்திரனும் இமையவரும் மலர்கள் தூவ
ஒழிசை யாழ் தும்புருநா ரதர்கள் மீட்க
சந்ததமும் வழியடியோம் சரோருகத்தாள்
தந்தெமையான் எனமுனிவோர் மறைகள் பாட
வந்தடியார் திருக்கூட்டம் வாழ்த்துக்கூற
வானோங்கு மரமகளிர் கவரி வீச
கந்தமலர்க் கடம்பா வெப்பட்டி ஒல்லை
கவினார்செந் தூர்முருகா ஆடீர் ஊஞ்சல் 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும் சங்கப்
பாவரசன் சிறையதனில் இடர்ப்பட்டேங்கி
வழுத்துமிசை கேட்டுருகி மனங்குழைந்து
வரைக்குகையை இடித்தருள்செய் வண்ணவேலா
அழுத்திடுந்தீ வினையலைக்கத் துணையே யின்றி
ஆறெழுத்தும் அகத்தமுத்தும் அடியேமுக்கும்
செழுக்கமல மலர்பாதத் தருள் சொரிந்து
சீராக வெப்பட்டிவேளை ஆடீர் ஊஞ்சல் 04

சட்டியிலே கொக்கவித்துத் தனிவேல் ஏவி
தளையவிழ்த்து வானவர்தந் துயரந் தீர்த்து
நட்டமிடும் மயிலேறி ஞாலமெங்கும்
நல்லருன் செய் துயிர்புரக்கும் ஞானமூர்த்தி
எட்டுமிரண் டும்மறியா மூடனேற்கும்
இடர்தீர்த்துன் அருள்பாலித் தெந்தைவேளே
மட்டவிழும் மலர்ப்பொழில் வெப்பட்டி ஒல்லை
வருஞ்செந்தூர் வேல்முருகா ஆடீர் ஊஞ்சல் 05

மானிடத்தில் வருகவென உரைத்த செஞ்சொல்
வாய்மையினால் பாற்கடலில் துயிலுமப்பெம்
மானிடத்தில் வருபசும்பொன் மயில னாளும்
மாசனுநற் றவமியற்றி மகிழ்ந்து வண்ண
மானிடத்தில் வந்து தினைப் புனைத்தைக் காக்க
மறைக்குடிலை காட்டியருள் ஆடல்செய்யும்
மானிடத்தில் வருபரனே ஆடீர் ஊஞ்சல்
வட்டூர்வெப்பட்டிவேளே ஆடீர் ஊஞ்சல் 06

ஏறுமயில் ஏறிவருமுகமுமொன்றே
எவ்வுலகும் ஒளிவிளக்கும் முகமு மொன்றே
கூறுமடி யார்வினைதர் முகமு மொன்றே
கோலமறைப் பொருளருளும் முகமுமொன்றே
மாறுபடு சூர்தடிந்த முகமு மொன்றே
வள்ளியொடு நகையமரும் முகமுமொன்றே
ஆறுமுகப் பொருளருளி ஆடீர் ஊஞ்சல்
அருளார்வெப்பட்டிவேளே ஆடீர் ஊஞ்சல் 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமறைகள் ஓலமிட்டு வணங்குந் தூய
அமலதுரி யங்கடந்த துரியாதீதப்
பெருவெளியில் விளங்குபர சிவத்தின் நெற்றி
பேறளிக்கும் விழியினிலா றனலாய்த்தோன்றி
கருணை பொழி திருவுருவாய்ச் சரவணத்தில்
கமலமலர்த் தொட்டில் வளர்ந் தருள்வேலேந்தி
சுரர்சிறையை மீட்டருள் வெப்பட்டி ஒல்லை
சோதிவடி வேலவனே ஆடீர் ஊஞ்சல் 08

முருகசர வணபவஓம் என்று வாழ்த்தி
மொழிகுழற அமுதுருகிப் பரவி ஏத்தி
திருவருள்தா எனவடியார் ஓலங் கேட்டுத்
தோகைமயில் ஏறிவருந்தேவ தேவா
பெருங்கிடுந்தீ வினையினில்வெந் தாவாவென்று
பிதற்றுகின்ற கடைச்சிறியேன் சொலையும் ஏற்று
அருளருளிச் சத்தியரோ டாடீர் ஊஞ்சல்
அணியார் வெப்பட்டியாய் ஆடீர் ஊஞ்சல் 09

திருவளரும் செம்பொன்முடி மணிக ளாட
சீர்வளர் குண்டலமாட மறைகளாட
அருள்வளரும் திருமுகச்செஞ்சோதி யாட
அண்டபகி ரண்டங்கள் குலுங்கி யாட
தருவளரும் கடம்பாடத் தண்டை யாட
தார்வேலும் மயிலாடச் சேவலாட
உருவளரும் இருமயிலும் ஆட ஆடீர்
ஒளியார்வெப் பட்டியாய் ஆடீர் ஊஞ்சல் 10

ஆதிசிவன் திருமகனே ஆடீர் ஊஞ்சல்
ஆறுமுக சோதியனே ஆடீர் ஊஞ்சல்
பாதியுமை பாலகனே ஆடீர் ஊஞ்சல்
பச்சைமயில் வாகனனே ஆடீர் ஊஞ்சல்
சோதிவடி வேலவனே ஆடீர் ஊஞ்சல்
தும்பிமுகற் கிளையவனே ஆடீர் ஊஞ்சல்
வேதமந்ர வடிவினனே ஆடீர் ஊஞ்சல்
வட்டூர் வெப்பட்டிவேளே ஆடீர் ஊஞ்சல் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

விண்சுரக்கும் மழைபொழிந்து வையம்வாழி
வியனரச நதியென்றும் விளங்கி வாழி
பண்சுரக்கும் வேதமறை பரவி வாழி
பயன்சுரக்கும் ஆறெழுத்தும் நீறும் வாழி
மண்சுரக்கும் அறங்களெலாம் மலிந்து வாழி
மன்னியமெய் யடியவர்கள் மலிந்து வாழி
கண்சுரக்கும் வள்ளிதெய்வயானை வாழி
கவினார் வெப்பட்டிவேளே வாழி வாழி 12

## எச்சரிக்கை

திருவார் வெப்பட்டி ஒல்லைத் தேவா எச்சரிக்கை
தேவயானை வள்ளி மகிழ் செல்வா எச்சரிக்கை
கருவேர் களைந்தருள் செய்திடு கடம்பா எச்சரிக்கை
கருணைபொழி முகமாறுடைக்கந்தா எச்சரிக்கை

பழநிமலை யார் பயந்த பாலா எச்சரிக்கை
பரஞ்சுடரின் உருவாகும் பரனே எச்சரிக்கை
அழகு கார்த்திகை மாதர் அன்பே எச்சரிக்கை
ஆறிரண்டு தோளுடைய அமலா எச்சரிக்கை

சரவணத்தில் உதித்த சத்திய சோதி எச்சரிக்கை
சடாட்சரமாய் நின்றருள்செய்சாமி எச்சரிக்கை
பரவுபவர் பவமறுக்கும் பரனே எச்சரிக்கை
பைந்தமிழ்ப் பாவலன்பின் வரு புலவா எச்சரிக்கை

ஏறுமயில் ஏறிவரும் இறைவா எச்சரிக்கை
ஈசரொடு ஞானமுரை இளையோய் எச்சரிக்கை
கூறுமடியார் வினைதீர் குமராஎச்சரிக்கை
குன்றெறிந்த வேற்குறிஞ்சிக்குகனேஎச்சரிக்கை

தேனோடு தினைமிசைந்த தேவா எச்சரிக்கை
தீந்தமிழ்ப்பாவலன் பின்வருகுழந்தாய் எச்சரிக்கை
மானோடு மகிழ்வள்ளி பங்கா எச்சரிக்கை
மரகத மயிலேறும் மன்னா எச்சரிக்கை

## பராக்கு

சீரலைவாய் மாத்தடிந்த சேயே பராக்கு
செந்தமிழ்வளர்த்த சங்கப்புலவா பராக்கு
சீரலைவாய் வேல்கொடுத்த சுவாமி பராக்கு
சிற்றடியோம் வினைதீர்க்கும் தேவா பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவாய் உருவாய் அருளும் அமலா பராக்கு
ஆறுமுகமான பொருள் அருள்வாய் பராக்கு
அருணகிரி யார்க்கருளும் அரசே பராக்கு
அடியவர்கள் துயர் துடைக்கும் அரசேபராக்கு

குன்றுதொறு மாடல்புரிகுமரா பராக்கு
குறுமுனிக்கும் மொழியுரைத்த குழந்தாய்பராக்கு
மன்றதனில் ஆடியவன் மகனே பராக்கு
மாறாத நோய்தீர்க்கும் மருந்தேபராக்கு

வட்டூர்வெப்பட்டிஒல்லை வடிவேல் பராக்கு
வாதாடும் புனவள்ளி வாழ்வேபராக்கு
எட்டுமிரண்டும் மறியேற்கருள்வாய் பராக்கு
எழிலார் வெப்பட்டிஒல்லை இறைவா பராக்கு

## வாழி

சரவணத்தில் வந்துதித்தோன் வாழி வாழி
சத்திசிவ சத்தி மகன் வாழி வாழி
குருபரனாய் வரும் ஒருவன் வாழி வாழி
கோலமயில் வாகனனார் வாழி வாழி

தேவகுஞ்சரிவள்ளி வாழி வாழி
சீர்ஞான வெற்றிவேல் வாழி வாழி
கூவுஞ்சேவலும் மயிலும் வாழி வாழி
குமரன் திருப்பதங்கள் வாழி வாழி

அகர எழுத்தானவனே வாழி வாழி
ஆறிரண்டு தோளுடையாய் வாழி வாழி
மகரமுமானவனே வாழி வாழி
மன்னுயிரைக்காப்பவனே வாழி வாழி

போதமிகுங்கருணை வாழி வாழி
புவனியில் நல்லறங்கள்வாழி வாழி
பாதம் பரவும் அன்பர் வாழி வாழி
பாரினில் தெய்வநீதி வாழி வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மங்கலம்

மங்கலந்திரு மங்கலம்
மங்கலம் திரு மங்கலம்
மயிலேறும் முருகனுக்கு
மங்கலம் திருமங்கலம்
மங்கலம்...

குன்றாடும் குமரனுக்கு
கோலவடி வேலனுக்கு
மன்றாடி மைந்தனுக்கு
வானோர்துயர் தீர்த்தவற்கு
மங்கலம்...

ஆறாறு தத்துவத்தின்
கப்பாலே நிற்பவர்க்கு
மாறுபடு சூர்தடிந்த
வண்ணவடி வேலனுக்கு
மங்கலம்...

துரியா தீதத்தில்
சுடரொளியாய் அருள்பவர்க்கு
அருமறைக்கும் எட்டாது
அப்பாலே நிற்பவர்க்கு
மங்கலம்...

தீராநோய் தீர்த்தருளும்
செவ்வேள் மலரடிக்கு
தீனர்களைக் காத்தருளும்
தேவாதி தேவனுக்கு
மங்கலம்...

திருத்தொண்டு செய்து வாழும்
செம்மனத்தடியவர்க்கு
அருள்புரிந்து அல்லல் தீர்க்கும்
அழகுவேலைத் தந்தவர்க்கு
மங்கலம்...

சீராரும் செந்தூர்வேல்
தந்த உமைபாலனுக்கு
ஏரார்வெப்பட்டிஒல்லை
எழுந்தருளும் கந்தனுக்கு
மங்கலம்...

ஆக்கம்
அமரர் ஆசிரியமணி கி. நெல்லிநாதன்.
(அராலி-வடக்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடம்பை தனித் தொழியப் புட்பறந்தற்றே
உம்போடு உயிரிடை நட்பு

## அறநெறி நின்று சிவனடி சேர்ந்த காங்கேயநாதன் விமலராணி அவர்கள் பெரும்பிரிவு குறித்த

# இரங்கற்பா

நீர்மலி சிறப்பால் நீள்கடல் சூழ்ந்த
எர்மலி பதியாம் எம்தமிழ் வாழ்க
பேர்மலி எழிலாம் யாழ்நகர் என்பர்
கார்மலி பொழிவால் கண்மனி விளைக
சீர்மலி பயனால் சீலர்கள் வாழ்க

நேர்கொள் யாழுதன் நிறைபால் திசையில்
பார்கொள் வளமாம் வட்கூர் எனவே
தக்கோர் உடனாய்த் தாளாச் சிறப்பில்
செந்நெல் கன்னல் செழித்துச் கழிக்க
மாவும் கதலியும் வருக்கைம் மருவி

பண்டிதர் நாவலர் பாவலர் மலிய
எண்டிசை எங்கிலும் எற்றமே கண்டு
சிற்பக் கலையில் செந்தூரன் அருளால்
பற்பல பரிசில் பெற்ற பல்லோர்
கற்பன கரையில் கற்று மேவ

பொற்புடன் நாடகம் புரவி நடனம்
விற்புடன் நாட்டுக் கூத்து வீரரும்
ஆடியே வேந்தர் ஆக்கு வூரில்
கலைநகர் என்பது கலைபதி தானாம்
விலைநிகர் இன்றியே வைரவர் அருளுற

கலைமதி சூடியே கடவுளர் விசுவேசர்
நிலைகொள அம்பிகை நிருத்தமே வேண்டி
பலவுறு சந்தமே பரவிடக் காண்டிட
முன்னோன் குமரன் முருகையாப் பெருமான்
கண்னோன் சரவணன் கருணையால் அமர்ந்து

புராதனப் பொருளாம் பொக்கிஷம் நிறைந்த
தளராப் பெரியன் தம்பரின் பூசையில்
வளராக் குழவி வள்ளலின் நிறைவால்
தன்னின் நிகரில் தற்பெரு வைத்தியர்
மன்னின் ஒளியாய் மேன்புரு அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அன்னவர் அன்பும் அறனும் சாரப்
தம்பரும் அன்புக் சிறப்பில் சேரப்
பொன்னர் வழியே புனிதன் சரவணமுத்து
மன்னியே பொன்னுச் சாமியைத் தந்திட
அன்னவர் ஆங்கு ஆச்சி முத்து

அருந்திறல் மணியை அமையக் காண்டு
திருந்திறல் காங்கேய தேவ நாதன்
பொருந்திறல் சண்முகா னந்த சிவம்
வருந்திறல் பத்ம நாதனைப் பெற்று
ஒப்புரவோடு வாழ்ந்து ஒழுகிடப் பேணிட

அப்பதி தன்னில் அந்நாள் முதலாய்
ஒப்பினில் ஓங்கி அப்பா வழியில்
கந்தையா என்னும் கனிவான் உதித்து
சித்த வைத்திய செம்மல் ஆகிய
மிக்க முத்தன் முன்னோன் குமாரசாமி

செப்பிட அரியன் காசிப் பிள்ளை
இப்புவி இயம்பும் இன்னாள் மாணிக்கம்
சீருறு செல்வி சிற்றாள் சிவஞானவதி
பேருரு வரிசையில் பேணியே வாழ்ந்து
ஆயுள் வேத அருங்கலை தோய்ந்து

ஏயுநல் வரிசை எய்தி இருந்து
அராவணி வேணியன் ஆரரு ளாலே
பராவரு வீரபத் திரர் தானும்
மாணிக் கமென் மங்கை மணந்து
ஆணிப் பொன்னாய் இனிதே இயங்க

புனிதம் செல்வி புஸ்ப வதியாள்
இனியக் கன்னி இரத் தினாவதி
மிக்காள் இராச மலர் தோன்றிட
அக்காள் இயம்பும் அரும் பாக்கிய
முத்தாய் விமல ராணி இயைய

குமர கோட்டம் குருபரன் இல்லம்
இமய கோட்டம் இயம்பிய முத்தோர்
அமைய திருமணம் அடைய எண்ணி
அமைய திருவுடை நாயகி அவளாம்
தவமலி செய்த தாழ்விலா பயனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருக நாமம் முப்போதும் ஓதும்
தரும சீலன் காங்கேய நாதற்கு
உருமை விமல ராணியாய் உறைக்க
கந்தன் கடம்பன் காங்கேய னருளால்
சொந்தம் ஆயினள் தூயநல் மாது

அன்பின் வழியில் ஒருயிர் உடலெனக்
பொறியற் சேவை பொறியிய லாளன்
அறிவியற் கேற்ப அவளுமே இயைந்து
நெறிமுறை கண்டு நிலமகள் விதப்ப
பணிவுடன் பாவை பக்குவம் பூண்டு

மாமனார் ஏற்றவும் மாமியார் போற்றவும்
ஆபயன் கொள்ளவும் ஆநிரை காக்கவும்
இன்பச் சோலையில் இனியன பாடிப்
துன்பச் சுமைகள் சுழலவே வீட்டிப்
ஆலயப் பணியில் அம்மையும் இனைய

சாலவே குடும்பம் சீரியல் கொண்டிட
கொண்டவன் சோதரன் பொறியிய லாளன்
சண்முகன் அடியன் சண்முகா னந்தசிவம்
பின்பது சோதரன் பத்ம நாதன்
அன்புடை சோதராய் அன்னவள் கண்டிட

முன்னைப் பிறவி முதுபயன் அதனால்
வள்ளிக் கணவன் வகையது அருளால்
அள்ளிச் சொரியும் அவளே மீரா
பள்ளிப் படிப்பில் பலவளம் கண்டு
பல்கலைக் க ழகம் பலவும் பயின்று

கல்விக் கடலில் கண்ணன் குளிக்க
சிரிப்பில் முல்லை சசியவள் எனவே
பரிவுடைக் குருபரன் பகலவன் தோன்ற
தெளிவுடைக் கமலன் தீர்மகன் தானும்
அப்பன் பாகத்து உமையாள் ஆகிட

பொற்புறு தனுசா பூமகள் சேர
அற்புதன் கோயில் ஆலவாய்ப் பிரான்
நற்புறு மைந்தன் நாமம் போற்றி
சிற்பொடு வாழ்ந்து சிறப்புகள் நீடக்
நயமுடன் மீரா நாயகி யானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தில்லை நடேசன் தீரனுக் காக்கி
கந்தன் போற்றும் கண்ணன் அவனை
கன்னிகை லதாவின் கணவன் ஆக்கி
மண்ணில் சசி மகளார் தமக்கு
கண்ணின் மணியாய் காண்டீ பனுக்கீந்து

குவலயக் கொழுந்து குருபரன் செம்மலை
அருமைச் செல்வி அனுரதிக் காகிட
உருமை உடையாள் உமையாள் மகளை
உத்தமன் நீலவண் ணனுக்கு கிணைத்து
சித்திரை நிலவாம் சிறியள் தனுசாவை

கைத்திறன் வரையும் கேதீசனுக் கீந்து
நல்மணம் புரிவித்து நவையறு கண்டு
இல்மணம் இனிக்க இனிய புரிந்து
சொல்வளம் குறையாச் சுந்தரி வாழ்ந்து
ஆலமர மென்றே அழகிய விருட்சத்து

பாலக் குஞ்சுகள் பனிமழை சொரிய
தாலக் குஞ்சுகள் தவளும் வண்ணம்
சீலக் கொண்டு சிறப்புற இயைந்து
கௌதமன் சாளினி கபிலன் பவித்திரன்
கௌசிக் சுகிர்தா கனிவு வேதன்

நிருஜனா பவித்தா திவ்வி ஜனா
அருமைப் பேரனர அவ்வி இணைத்து
பெருமைக் குலமகள் பேருற வாழ்ந்து
மக்கள் புலம்பவும் மருகர் மறுகவும்
தொக்க நற்சுற்றம் துடித்துக் சோரவும்

காரும் முகிலும் கனன்று தோன்றி
நாளும் மாறும் நாள்கள் போலவே
ஊரும் உறவும் உள்ளம் நடுங்கவும்
இகமதை விடுத்து எந்தை பிரான்
பதமது சரணம் கூடினள் மன்னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தேற்றம்

உற்றார் ஆருளரோ உயிர் கொண்டு போம் பொழுது குற்றாலத் துறை
கூத்தன் நமக் கல்லால்
உற்றார் யாருளரோ.

*தடித்தவோர் மகனைத் தந்தையீண் டடித்தாற்*
*றாயுட னணைப்பள்தா யடித்தாற்*
*பிடித்தொரு தந்தை யணைப்பனிங் கெனக்குப்*
*பேசிய தந்தையும் தாயும்*
*பொடித்திரு மேனி யம்பலத் தாடும்*
*புனிதநீ யாதலா லென்னை*
*அடித்தது போது மணைத்திடல் வேண்டும்*
*அம்மையப் பாவினி யாற்றேன்.*
*(வள்ளவர்)*

மூவர்கண் முதல்வன் வந்தான் முக்கணான் குமரன் வந்தான்
மேவலர் மடங்கல் வந்தான் வேற்படை வீரன் வந்தான்
ஏவருந் தெரிதல் தேற்றா திருந்திடு மொருவன் வந்தான்
தேவர்கள் தேவன் வந்தான் என்றன சின்னம் எல்லாம்



எங்கணும் பணி வதனங்கள் எங்கணும் விழிகள்
எங்கணும் திருக் கேள்விகள் எங்கணும் கரங்கள்
எங்கணும் திருக் கழலடி எங்கணும் வடிவம்
எங்கணுஞ் செறிந் தருள்செயும் அறுமுகத் திறைக்கே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தின் செய்தி

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அற்புதமானதொன்று இருக்கிறது. ஆனந்தம், சாந்தி என்ற உணர்வுகள் ஒவ்வொருவர் இதயத்திலும் உள்ளன.

உயிர் வாழ்வதில் உள்ள உன்னதமான உணர்வை மக்களுக்கு ஞாபகமூட்டி அதை அனுபவிக்கும் ஆர்வத்தை நான் அளிக்கிறேன். ஒவ்வொருவரும் உள் நிறைவோடு வாழ முடியும் என்பதை மக்கள் அறிந்துகொள்ள நான் ஊக்கம் கொடுக்கிறேன்.

ஒவ்வொருவர் உள்ளத்திலும் சாந்தி இருக்கிறது. அதை அவர்கள் உணர முடியும் என்ற இந்தச்செய்தி உலகத்தில் மிகவும் தேவையாக இருக்கிறது. இந்த ஒரு செய்தி எல்லோருக்குமே பொதுவாக இருப்பதை அறிந்துகொள்வது முக்கியமானது.

இவை வெறும் சொற்களல்ல. நான் இதயத்தில் உள்ள நிறைவை உணர்வதற்காகச் செயல் முறையான ஒரு வழியை அளிக்கிறேன். என் செய்தி புதியதுமல்ல பழமையானதுமல்ல இது காலம் கடந்த ஒன்று. நாம் விரும்பும் சாந்தியும், உள்ளத் திருப்தியும் நம்முள்ளே எப்போதுமே இருந்து வந்துள்ளன. அதை அனுபவிக்கும் தருணம் இது.

இந்த வாய்ப்பை ஓர் அன்பளிப்பாக மக்களுக்கு நான் வழங்க விரும்புகிறேன். அவர்கள் இதை ஏற்றுக் கொண்டால் முடிந்த விதத்திலெல்லாம் அவர்களுக்கு இதற்கான உதவிகளைப் புரிய விரும்புகிறேன்.

இதற்காகத்தான் "பிரேம் ராவத்" அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளது. எனது முயற்சியாலும் அறக் கட்டளையின் உதவியாலும் இந்த செய்தி உலக மக்களைச் சென்றடையும் என்றும் இதனால் மக்கள் தங்கள் வாழ்வில் மிக உன்னதமானதொரு அனுபவத்தை விரும்பக்கூடும் என்றும் நான் நம்புகிறேன்.

எங்கேயெல்லாம் தேட விரும்புகிறீர்களோ தேடுங்கள் உங்கள் வாழ்வில் அமைதியை உணருங்கள் அதுதான் முக்கியம். எங்கேயும் கிடைக்காவிட்டால் என்னிடம் வாருங்கள் என்னால் உதவ முடியும்

– பிரேம் ராவத் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேம்ராவத்

மஹாராஜி என்று பரவலாக அழைக்கப்படும் பிரேம் ராவத் அவர்கள் உள்ளத்தில் சாந்தியை உணரும்படி மக்களைக் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக ஊக்குவித்து வருகிறார்

வட இந்தியாவில் ஹரித்துவாரத்திலே பிறந்த அவர் தன்னுடைய மூன்றாவது வயதிலேயே மக்களிடம் இதைப்பற்றி உரையாடத் தொடங்கி நான்காவது வயதில் முதல் முறையாகப் பொது நிகழ்ச்சியில் சொற்பொழிவு ஆற்றினார். தன்னுடைய எட்டாவது வயதிலிருந்து இந்தச் செய்தியை இந்தியாவில் பல இடங்களுக்கும் எடுத்துச் சென்றார் அவருடைய பதின்மூன்றாவது வயதில் லண்டன் மற்றும் லாஸ் ஏஞ்ஜலிஸ் நகரங்களில் உரையாற்ற அழைக்கப்பட்டார். அன்றிலிருந்து இதுவரை 250 நகரங்களிலும் 88க்கும் மேற்பட்ட நாடுகளிலும் உள்ள ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் அவருடைய உரைகளைக் கேட்டு ஊக்கமும் புத்துணர்வும் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

அவருடைய செய்தி 88 நாடுகளில் 70க்கும் அதிகமான மொழிகளில் கிடைக்கக்கூடியதாக உள்ளது. இவை சொந்த விருப்பத்தின்பேரில் மக்கள் அளிக்கும் நன்கொடையாலும், இந்தச் செய்தி உள்ளடங்கிய சாதனங்களின் விற்பனையாலுமே முற்றிலும் நடைபெற்று வருகிறது.

# சித்திக்கச் சிலவரிகள்

- பணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது. பணம் இருந்தால் உன்னை உனக்கே தெரியாது
- நல்ல அறிவு எந்த மூலையில் எவ்வளவு தூரத்தில் இருந்த போதிலும் அதைத் தேடிச் செல்.
- பிறர் செய்வதில் எது உனக்குப் பிடிக்கவில்லையோ அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே.
- நீ சந்தோசமாக இருக்கும் போது வாக்குறுதிகளைக் கொடுக்காதே! கோபமாக இருக்கும் போது கடிதங்களை வரையாதே.
- விழுவது வெட்கமல்ல, விழுந்து கிடப்பதே வெட்கம்.
- நல்லதையோ, தீயதையோ எதை ஒருவன் செய்தாலும் அதன் விளைவுகள் அவனைத் தொடந்து கொண்டே இருக்கும்
- சோம்பலின் விளைவு வறுமை, முயற்சியின் விளைவு மூலதனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தெய்வம் தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

## நினது தோற்றம், நாளும், நிழலிடக் காண்கிறோம் தாயே

வட்டுநகர் தாய்பரவும் வண்மை உள்ளோய்
வனசமகள் குணமெல்லாம் நீயே ஆனோய்
இட்டமுடன் எவருக்கும் இன்பம் செய்தே
இதயமவர் இடங்கொண்ட இறைவி நீயே
விட்டகலா சிவநெறி வாழ்வு கண்டு
விமலனடி வழுத்திவந்த வித்தகி நீயே
தொட்டதெலாம் பொன்விளையும் தோகை உன்தன்
தெரிசனந்தான் இனியெப்போ காண்போம் அம்மா —01

பொங்கிவரும் அன்பினொடு பூவை நீயும்
புதல்வோர்கள் புதல்வியர்கள் ஏற்றங்கண்டு
இங்கிதனின் மேலான இன்பம் இல்லை
இல்லறமே நல்லறமாம் என்று அன்புத்
தங்கமுறு கணவருடன் சேர்ந்து நின்று
தகைமைசால் மகராஜி வழியும் காத்தீர்
துங்கமுறு நன்மார்க்க ஞானம் பெற்றீர்
தொடர்ந்தவரின் சேவையினைச் செய்தீர் அம்மா —02

ஆற்றன்மிகு தலைமகன் கண்ணன் தானும்
அருத்தியொடு இலண்டன்நகர் புக்கிப் போற்றும்
ஏற்றமுறு கலாநிதிநற் பட்டங்காண
ஏந்திழைநீ ஆவலுடன் ஏக நின்றீர்
போற்றவரு முருகையாதம் குடமு முக்குப்
பொற்புறுகாட் சியைக்காண ஆசை கொண்டீர்
மாற்றமிலா மனத்தினளாய் நீயி ருக்க
முருகையன்தன் தாள் கூட்டி நின்றான் போற்றி —03

மறவாது முருகையனை நாளும் ஏத்தி
மனநிறைவு பெற்றுவந்த மங்கை மன்னே
உறவுகளும் விருப்புடனே நாளுங் கூடி
உவந்துண்டு மகிழுமெங்கள் உத்தமி மன்னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தகுடிப் பெருமைபேணும் பாவை மன்னே
புகுந்தகுடிப் புகழ்போற்றும் புனிதம் மன்னே
சிறகுக்குள் எமைவைத்துக் காத்தீர் மன்னே
சிறந்திடவே குஞ்சுகள்நாம் மண்ணில் மன்னே —04

## வேறு

பாசமும் அன்புங் கூட்ட
பணிவுடன் நாளும் பழகி
வாசநல் மலராய் வந்து
வாழ்வினில் மணமும் வீசி
ஆசைசேர் கதைகள் பேசி
ஆறுதல் அடைந்த தெல்லாம்
நேசமார் நினைவாய் நின்று
நித்தலும் நிழலா டுகிறதே —05

## வேறு

பூசைக்கு வந்த மலரை — எங்கும்
புகழ்பூத்த இன்பத் தேனை
ஈசன்நீ உவந்த பூவை — எங்கள்
இன்னுயி ரான தாயை
ஓசைநல் ஒளியு மாளை — ஐயா
ஒப்பிலா மணியே முத்தே
தேசுயர் திருத்தாள் சேர்த்தே — நன்கு
திகழ்ந்திட வைப்பாய் போற்றி — 06

பன்னுமா லயங்கள் தந்த
பொன்னரும் அப்பா வாரும்
உன்னத உறவுபேணி
உவந்ததை ஊரோ உரை
மன்னவன் காங்கேய நாதன்
மங்கை விமலரா ணிநல்
மணத்தினை இயற்றி வைத்தார்
மீண்டு நல் உறவும் வாழ. —07

குடும்பத்தினர்

நிலவில்லாது வானம் இருண்டது
நிழலில்லாது மேகம் வெளுத்தது
மலரில்லாது சோலையும் காய்ந்தது
மனதும் பாழ்த்த மண்டபம் ஆனது

-குகை நமச்சிவாயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அம்மாவிற்கு அஞ்சலி

அம்மாவின் மரணம் பற்றி கேள்விப்பட்டது அதிர்ச்சியில் உறைந்து போனேன் என்னையும் அறியாது ஏங்கி குரலெடுத்து அழுதேன் என்நினைவுகளை எனது கடந்த காலம் அடைந்து கொண்டது. அம்மா அப்பாவிற்கு மூத்த பிள்ளையாக பிறந்தேன் என்னையும் என் சகோதர சகோதரிகளையும் பாசத்துடன் நேசத்துடனும் ஊட்டி வளர்த்தீர்கள் நல்ல கல்வியைப் பெற வழிவகை செய்தீர்கள்.பொறுப்புடன் திருமணம் செய்து வைத்து என்னுடைய சிறப்பைக் கண்டு சந்தோஷப்பட்டீர்கள்.

எங்களுடைய ஒவ்வொரு அசைவிலும் அம்மா கூடவே இருந்தா. எங்களை வழிநடத்தினா அன்பினாலும் சிலவேளை கண்டிப்பினாலும் குடும்பவாழ்விற்கு ஏற்ற வகையில் புத்திமதிகள் கூறினார்கள் அப்பாவிற்கு அவரது பணிகள் அனைத்திலும் உறுதுணையாக இருந்தார்கள் எங்கள் கோயில் நிர்வாகத்தை திறம்பட நாடாத்த உறுதுணைகளாக இருந்தார் உறவினர்களை வரவேற்று உபசரித்து அரவணைத்து நல்ல பண்புள்ள அன்னையாக எங்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்தா.

எனது கணவருடன் மிகவும் வாஞ்சையாகவும் அன்பாகவும் இருந்தார்கள் பேரன் பேத்திகளுக்கு அன்பை பொழிந்து எல்லார் கண்ணிலும் கண்ணீரை வரவழைதது விட்டு மறைந்துவிட்டார் ஆனாலும் எங்கள் நினைவுகளில் என்றும் நிலைத்திருந்து.வழிநடத்துவீர் என்ற நம்பிக்கை உண்டு

உங்கள் அன்பு மகள்
தில்லைநடேசன் மீரா

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் வைத்ததொரு
கல்வி மனப்பழக்கம் -நித்தம் நடையும் நடைப்பழக்கம்
நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அம்மாவிற்கு அஞ்சலி

என்னால் நம்பமுடியவில்லை என் அம்மா இறந்த செய்தி பொய்யாக இருக்ககூடாத என்று மனது அலைபாய்கின்றது. எனது ஒவ்வொரு நகர்விலும் அம்மாவின் பங்களிப்பு மகத்தானது சிறுவயதில் என்னை அன்போடும் பண்போடும் வளர்த்த அம்மா எனது கல்வியில் முழுக்கவனம் செலுத்தினார். நான் எவ்வொரு வகுப்பும் சித்தியடையும் போது சந்தோஷப்பட்டு மேலும் ஊக்கம் கொடுப்பவர். நான் O/L சோதனை, A/L சோதனைக்கு படிக்கும் போது தானும் என்னுடன் விழித்து இருந்து என்னைக் கவனிப்பவர். எனக்கு தேவையானவைகளை செய்து தருபவர்.

நான் பல்கலைகழகம் நுளைந்த போதும் விசேட சித்தி பெற்று விரிவுரையாளர் ஆனதும், அளவில்லா சந்தோஷம் அடைந்தார். மேற்படிப்புக்கு இந்தியா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு சென்று படிக்க ஊக்குவித்தவர்.

நான் வெளிநாடுகளில் இருந்த போது மிகுந்த மனோபலம் தந்தார். ஒவ்வொரு வருடமும் தன்னை வந்து பார்க்கும்படி கூறுவார். எனது மனைவி குழந்தைகளுடன் அன்போடும் பாசத்துடனும் அரவணைத்து அகமகிழ்வா. எனது Ph.D பட்டமளிப்பு விழா அவர் முன்னால் நடை பெறவேண்டும் என எண்ணி இருந்தேன். அது நடபெறமால் போனது எனக்கு மிகுந்த மன வேதனையை தருகின்றது. அம்மாவின் இழப்பு எனக்கு ஈடுசெய்யமுடியாத பேர் இழப்பாகும்.

உங்கள் அன்பு மகன்
கா.கண்ணன்

எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு
பொல்லாய் புழுமலி நோய் புன்குரம்பை - நல்லார்
அறிந்திருப்பார் ஆதலினால் ஆக்கமல நீர் போல
பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# துயர் சுமந்த காலத்தில் ஓர் அன்பு

பத்து மாதம் சுமந்து என்னை பரிவுடனே பார்த்த தெய்வம் என் வாழ்வில் ஆனந்தமாய் ஆயிரம் இன்பங்கள் தந்தாயே உங்கள் மனவிருப்புடனே என் விருப்பும் கேட்டு என் வாழ்க்கைக்கு நல்லது துணைவனும் தந்து வெளி நாடு என்றாலும் என் மண நாளில் என் கரம் பிடித்து கரம் கொடுத்து ஆனந்தம் கொண்ட தாயே இன்னும் மகிழ்வுடனே சில காலம் வாழ்ந்து ஆனந்தம் கொண்டிருக்கலாம் எம்மைவிட்டு சென்றது ஏனோ? நான் எங்கு சென்றாலும் ஊரார் சின்ன விமலராணி என சொல்லுவார்கள் அவர்கள் சொல்லைக்கேட்டு ஆனந்தம் கொண்டேனே என என் முதல் இரு செல்வங்களையும் ஈழநாடு வந்து உங்கள் கண்களில் காட்டியும் ஆனந்தம் கொண்டேனே. என் கடைச் செல்வம்தனைக்காண ஆசை கொண்டு எனை அழைக்க நான் வரும் முன்னே தாங்கள் முன்னே விண் சென்றது ஏன்? கண்டம் விட்டு கண்டம் வந்தேன் என் கடைசி மகனுடனும் உங்களை இந்நிலையில் பார்க்கவா

பந்தந்தான் பிடிக்கவா? மூடிய கண்களுடன் என்றாலும் என்னைஆன்ந்தமாகப் பார்த்தீங்கள் தானே ஆத்ம சாந்திக்காகமுருகையாப் பெருமானை இரஞ்சிகின்றேன்

சசி காண்டீபன்.

மௌனத்திற்கு நிகரான நண்பன் கிடையாது. மௌனம் எனும் நண்பன் நம்பிக்கைத் துரோகம் செய்யான்.

சுவாமி சித்பவானந்தர்

சிவாய நமவென்று சந்தித்து இருப்போர்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை - உபாயம்
அதுவே மதி ஆகும் அல்லாத எல்லா
விதியே மதியாய் ஆகிவிடும்.

**"This is your life and your opportunity to spend some time with the one inside of you and feel blessed."**

"Maharaji"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் அம்மாவே

எனக்கு அன்பையும் நற்பண்பையும் அள்ளித் தந்த அம்மாவே! நீங்கள் குடும்பத்தில் கடைசிப் புதல்வியாய் பிறந்தீர்கள். நீங்கள் அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பப்பா, சகோதரிகளால் செல்லமாக வளர்க்கப்பட்டீர்கள்.

உங்களுக்கு உங்கள் மனம் போலவே மிக சிறந்த வாழ்க்கையை அமைந்தது. மனைக்கு மாட்சி மிக்க நல்ல மக்களைப் பெற்றெடுத்தீர்கள். (என்ற வள்ளுவரின் வாக்குக்கு அமைய) செல்வத்தை அள்ளிக் கொடுக்கும் தேவி இலட்சிமியைப் போல் முதல் புதல்வி மீராவையும் அடுத்து கணித வல்லவன் கண்ணனையும், சசியையும், குருபரனையும், கமலனையும் நிறைவாக உமையாள் தனுசாவையும் பெற்றெடுத்தீர்கள். அம்மாவை 2000ம் ஆண்டு பிரிந்து சென்று 2001ம் ஆண்டு பிரான்ஸ் சென்றேன். அப்போது எனக்கு ஆறுதல் கூறிய நீங்கள், மகனே உடம்பை கவனி, கவனமாக வேலை செய்யவும் எனக்கூறினீர்கள் தற்போது எனக்கு ஆறுதல் சொல்ல எவருமில்லை. நான் என்நேரமும் உங்கள் நினைவோடு இருந்து வந்தேன். அம்மா இறைவனடி சோந்தது கனவா நினைவா எனத் தொரியவில்லை. எனக்கு விசா கிடைக்க வேண்டும் என்று முருகையா கோயிலுக்கு நேர்த்தி எல்லாம் வைத்தீர்கள். விசா கிடைத்தும் ஊருக்கு வருவது என எண்ணியிருந்தேன். ஆனால் என்னை தனிய வரவேண்டாம் என்றும் வற்புறுத்தினீர்கள். மருமகள் அனுரதியையும், பேர்த்தி பவித்தாவையும் கூட்டிக் கொண்டு இந்தியாவிற்கு வரும்படி கூறியிருந்தீர்கள் ஆனால் உங்கள் கனவை என்னால் ஈடுசெய்ய முடியவில்லை ஆனால் அயலில் உள்ளவர்களுக்கு எனது மகன் குருபரன் வருகின்றான் என புகழாரம் சூட்டினீர்கள் அம்மா உங்கள் கனவிற்காகத் தான் வெளிநாடு சென்றிருந்தேன். ஆனால் உங்களைப் பிரிந்து என்னால் இருக்க முடியவில்லை எனக்கு கடைசியாகச் சொன்னீர்கள் "கோயிலை மிக விரைவாக கட்டவேண்டும்" தம்பி வாகீசன் வந்த போதும் எல்லோரும் சேர்ந்து கோவிலைக் கட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டீர்கள் 21ம் திகதி காலையும் முருகையா கோயிலுக்கு சென்றுவந்தீர்கள். இரவு எல்லோரிடமும் சேர்ந்து கூடிக் குலாவினீர்கள். பின்னர் இறைவன் எங்களிடமிருந்து தம்மைப் பிரித்து விட்டான். உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல முருகப் பெருமானைப் பிராத்திக்கின்றேன்.

*நன்றி*

அன்பின் மகன் , மருமகள், பேர்த்தி
கா.குருபரன் கு.அனுரதி கு.பவித்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது

# அம்மா, தாய் அன்புக்கு ஈடாகுமா?

அம்மா! மீளாத் துயிலில் நீங்கள் மீளாத் துயரில் நாங்கள். கமலன் கமலன் என்று கடைசிவரை கூப்பிட்டீர்கள் என்னோடு நன்றாக கதைத்தீர்கள் உங்களுடன் இருந்த கடைசிப் பிள்ளை நானே உங்கள் கடமைகளை புரிந்தது மட்டுமல்ல கடனையும் புரியவைத்து உள்ளீர்கள். தாய் அன்புக்கு ஈடாக இவ்வையகத்தில் யார் உள்ளார்! உங்கள் பிரிவின்போது அனுபவித்த உணர்வு எனக்கே உண்டு. வழமையினை மாற்றி அன்று நேரத்துடன் அப்பாவிடம் இருந்து உணவு வாங்கி உண்டதும் உரிமையோடு என்னிடம் உதவிகளைக் கேட்டதும் என் உள்ளத்தை உறுத்துகின்றது.

அம்மா... என்று கதறினேன் கத்தினேன் அந்தக் காலன் காதில் கேட்டாலும் உங்கள் கடமை முடிந்தது. அதனாலேயே உங்களைக் கூட்டிச் சென்றான் போலும். கடமை முடிந்தது உங்களுக்கு தெரிந்ததினாலேயே எங்களைப் பிரிந்தீர்கள். உஙகள் பிரிவினால் பரிதவித்த உங்கள் பாசப் பூனை நீங்கள் வீட்டில் இருந்து கடைசிப் பயணம் செல்லும் வரை உணவு உண்ணாது. உங்கள் காலடியில் குந்தி இருந்ததை உங்கள் செய்தி கேட்டு வந்த அனைவரும் அறிவர். உங்கள் நினைவோடு இருக்கும் எமது ஆறுதல் பிராணி.

அம்மா நீங்கள் என்மீது அதீத அக்கறை வைத்து இருந்தீர்கள். அப்பாவைப் போல நான்Electical Engineer ஆக வரவேண்டும். செலிங்கோ இன் சூரன்சில் மேல் பதவி பெறவேண்டும் என்ற கனவுகளுடன் இருந்தீர்கள். உங்கள் கனவுகள் எல்லாம் நனவாகவேண்டும் என்பது எனது விருப்பம். உங்கள் பெயர் விமலராணி ஆனால் அம்மா நீங்கள் எமது குடும்பத்தின் மகாராணி. இவ் உலகத்தில் நீங்கள் இல்லையானாலும் நீங்கள் என் உள்ளத்தில் நீங்காத நினைவாகவே என்றொன்றும் இருப்பீர்கள். உங்கள் அன்புக்கு இனியாருண்டு. இவ்வையகத்தில் என் நாவில் அம்மா என்ற சொல் உங்களைவிட யாரை உச்சரிக்க முடியும். நீங்கள் ஆரம்பித்துக் கட்டுமானப் பணியான எமது முருகையா ஆலயத்தை தரிசித்து பின் எம்மைப் பிரிந்தீர்கள். நாம் எல்லோரும் முருகையா ஆலயத்தில் உங்களைப் பார்ப்போம். எனது உள்ளத்தில் அமைதி உண்டு ஆறுதல் உண்டு ஏன் என்றால் உங்கள் நிவைுகளுடன் உங்கள் நினைப்பினை நிறைவு செய்வதில்

கமலன்

தாயிற் சிறந்த கோயில் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேய் அவள் புலம்பல்

அம்மா அம்மா
எங்கே சென்றீர்
என்னை பாலூட்டி தாலாட்டி, சீராட்டி
வளர்த்த அன்புதாய்
கண் காண இடம் சென்றீரோ
உங்கள் அன்புத் திருமுகம் காண
நான் ஓடோடி வரவெல்லோ இருந்தேன்
அதற்குள் ஏன் அம்மா
எம்மை தண்ணீர் கடலில் மூழ்கடித்து சென்றீர்
ஈர் ஐந்து திங்கள் சுமந்து என்னை
ஈன்ற தாயே என் நெஞ்சம் எல்லாம்
நீதான் தாயே
எம்குடும்ப ஆழமரம் இன்று
சரிந்து மண்ணில் தான் விழுந்ததுவோ
உன் மடியில் அமர்ந்து ஆறுதல் தேடிய பறவை நான்
இனி எங்கே சென்று அமைதியை தேடுவேன் தாயே
என் அன்பு தெய்வமே
உன் பிரிவு என்னை ஆறா துயரத்தில் ஆழ்த்தியதே
தாயுமாய், தோழியுமாய், எல்லாமாய் ஆகிய அன்னையே
உன் திருவடி தன்னை போற்றியே நிற்கின்றேன்
ஒரு முறை எழுந்து உன் திருமுகம் காட்டி பிள்ளை
என அழைத்தாயோ என்று ஏங்கி தவித்திருந்தேன்
உன் ஆத்மா அது அமைதியடைய வேண்டி
எம்மை ஆட்கொனட திருமுருகன் திருவடியை வேண்டி
நிற்கின்றேன்.
சென்றுவா தாயே மீண்டும் எம் மகளாய் பிறந்துவா தாயே
அன்னையே போற்றி என் தாயே போற்றி
போற்றி போற்றி

**உந்தன் பிரிவில் வாடும்,**
**உந்தன் அன்பு மகள்,**
**நீலவண்ணன் உமையாள்**

பொருளுக்கும் போகத்துக்கும் பதவிக்கும் மக்கள் குடம்குடமாத் கண்ணீர் சிந்துகின்றனர் . கடவுளுக்காக வென்று யார் கண்ணீர் சிந்துகின்றார்கள் கடவுளைநாடி அருள் தாகமெடுத்துக் கசிந்து அழுகின்றவர்களுக்கு கடவுள் தம்மைக காடிட்டியருள்கிறார்.

-ஸ்ரீ ராம கிருஸ்யர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத்தாயாக இவ் வையகத்துள் யார் உள்ளார்

எல்லாப் பிள்ளைகளும் தங்கள் தங்கள் தாய்மார்களிடம் அளவற்ற அன்பும் பாசமும் வைத்திருக்கின்றார்கள். அதே போல் தாய்மார்களும் தத்தம் பிள்ளைகளிடம் அளவற்ற அன்பும் பாசமும் வைத்திருப்பார்கள். ஒரு சிலருடைய வாழ்வில் பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே உள்ள உறவில் பிறந்தநாள் தொடக்கம் அவர்கள் பிரியும் காலம்வரை மிகமிக நெருக்க இறுக்கமான உறவினைக் காணலாம். அந்தவரையில் எனக்கும் என் தாயாருக்கும் இடையே ஏற்பட்ட உறவை என் வாழ்வில் ஒரு பெரும் பேறாக கருதுகின்றேன். பிறந்தநாள் முதல் இன்றுவரைக்கும் தாயாரோடேயே இருந்து அவருடன் வாழ்ந்து வந்தேன். அவர் நோயுற்ற வேளையிலும் கூட அவருடனேயே இருந்து அவருக்கு செய்யவேண்டிய சேவைகளை செய்யும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. நான் இச் சேவையை எனது தாயாருக்கு திறம்பட செய்வதற்கு உறுதுணையாக இருந்தவர் என் கணவர்.

என்னுடைய மகப்பேற்றை கண்டுகளிக்க ஆசைப்பட்ட என் அன்னை அதனைக் காணாமல் சென்றதையிட்டு நான் நினைக்கும்போது என் நெஞ்சம் பற்றி எரிகின்றது. என் அன்புத் தாயை இனி எப் பிறப்பிலே காண்பேன். அம்மாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல செந்தில் முருகையாவை வாழ்த்தி வணங்குகின்றேன்.

தனுசா. கேதீசன்

> ஒருவர் பேசியது புண்படுத்தவில்லை. நாம் எடுத்துக் கொள்ளும் விதம்தான் புண்படுத்துகிறது.

**"If you can find joy within you have all the fulfillment you can ever have.**
**But it must be yours - not defined in a book - yours."**

**"Maharaji"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இரண்டாவது தாய்க்கு என் கவிதாஞ்சலி

பாற்கடலில் மிதந்துவரும் அமுதசுரபி, பசும்மலை
வெளிகளில் சிறகடிக்கும் வண்ணபுறா நிலவொழுகும்
இரவொன்றில்
சில்லென்று பூத்திருக்கும் மல்லிகைப்பந்தல்.

நீண்ட நாள்களுக்கு பின் என் கவிதைத்தாய்
புன்னகைத்தாள் வார்த்தைகள் தானாக வந்து விழுந்தது

என்நெஞ்சு விம்முகின்றது
எனினும் என்னிடம் விரக்த்திஇல்லை
என் கண்கள் பனிக்கின்றது
எனினும் என் மனதில் தனிமை இல்லை

விரக்தியில் விழும்போதெல்லாம்
எங்கிருந்தோ ஒரு குரல் என்னை வருடிச் செல்கிறது
தனிமையில் இருக்கும் போதெல்லாம்
கரம் ஒன்று என்தலை கோதுகின்றது.

வாழ்க்கை மகத்தானது என்று
இயற்கை சொன்னது
தர்கத்தில் அடங்காத அன்பு கலந்த வாழ்க்கை
இயற்கையை விட மகத்தானது என்றாள் என்தாய்

ச. தில்லைநடேசன்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்ப காய்கவர்ந் தற்று.

"Let your heart be fulfilled with gratitude prosper and enjoy this life every year every month every week every day every hour and every liring moment."

"Maharaji"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் ஆசைமாமியே.. என் இனிய தோழியே..

துயர் சுமந்த களத்தின் ஓர் ஆண்டின் முன்
(21.02.10) இல் புலர்ந்தும் புலராத
பொழுதுபோல் இலண்டன் பகல் பொழுதுதானிக்க
ஏதுமின்றி ஏனோ என் துணைவி அவள் சோகமுடன்
தானிக்க ஏது குறை உனக்கு என்று நான் வினவியபடி
தானிக்க வந்ததுவே உன் மைத்துனியின் தொலை அழைப்பு...
அதுதொலை அழைப்போ துயர்பகிர்வோ உயிர்பறிப்போ....
இவ்வுலகில் நான் இல்லை என்பதுபோல் உணர்வுதான் இன்று எனக்கு...

ஓர்இரவு முன்புதானே பல கதைகள் தான் சொன்ன
வாய் அதுவும் வாய்க்கரிசிக்கு........ ஆழனதுவோ.....
எப் போதும என் அழைப்பில் மலர்வுடனே கதை பேசும்
என் ஆசை மாமியே மீளாத தூக்கம் தான் ஏனோ..எப்பொழுதும்
என் தொலை அழைப்பில் கனப்பொழுதில் மடக்க நான் எண்ணி
காட்டமாக விளு தொடுக்க சட்டென்று பதில் சொல்லும்
என் ஆசை மாமியே மீளாத தூக்கம் தான் ஏனோ...என்றும்
தங்களுக்கு ஏன் இந்த நிகப்பூச்சு என்று கேட்டு
தங்கள் அகவை எந்தனை என்று தான் வினவ இருபத்திரண்டு

என்று பதில் தந்து பல கதைகள் தான் சொல்ல துணைவரன்று பக்கத்தில்
வந்தவுடன் வெட்கமுடன் அவரை விலக சொல்லிய
அந்த நாணமும் தொலைந்ததுவோ...
என்ன கொடுமை செய்தேன் என் இந்த இழப்பு எனக்கு..
ஈர் மூன்று ஆண்டின் முன்பு கலை நகரில் நான் கண்ட
உங்கள் ஓர் உருவம் தான் என் கண் முன்னே .. நின்றாலும்
ஓராயிரம் சம்பவங்கள் திரையாய் ஓடுதுவே.. எதை மறக்க எதை சொல்ல
குமரகோட்டத்தில் கூடியிருந்து வாய்கு
உருசையாய் உணவு தந்து உவகையாய் கதைகள் பல சொன்ன
பொழுதுதான் இனிவருமோ...
சொற்ப காலம் தான் என் வாழ்வில் உங்களுடன் "கொண்டாட" முடிந்தாலும்
எதை மறக்க எதைச் சொல்ல...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவிச்சக்கரவண்டியில் ஏற்றி விபத்தான பொழுதையா
காலை நேர பூசையில் வைரவர் கோயிலில்
தந்த வாழைப்பழத்தை மாலை வரை மடியில் தான் வைத்து எனக்கு
தந்த பொழுதையா
முருகையா கோயிலில் அன்னதானத்தில் நான் உண்ணும் வரை
உணவருந்தா பொழுதையா
தங்களுக்கு சளிக்கு மருந்து போட்டு உறக்கமதில்
தானிருக்க எனக்கு உடல் நலக்கேடு என்றவுடன்
ஆட்டோ வுடன் ஓடிவந்து பல வைத்தியர்களிடம்
எனை அழைத்து சென்ற பொழு...தையா
என்ன கொடுமை இது ஏன் இந்த இழப்பு எனக்கு...
இன்னும் சில காலத்தில் ஒரு தேசம் விடியும் வேளை
வசந்தமுடன் ஓடி வந்து குமரகோட்டத்தில் கூடிமகிழ
நினைத்த என் நினைவில்...
ஏன் இந்த இழப்பு எனக்கு..
எதையும் பொறுமையுடன் தான் செய்யும் உங்களுக்கு
கயவன் அவன் அவகாசம் தரவில்லை என்றாலும்
நான் வணக்கும் ஐயப்பனும் என்குலதெய்வம் வைரவரும் என் துணை
அவளின் முருகனும் அவர்கள் பாதம் தன்னில் ஓர் இடம் தந்தனரே..
என வேண்டி என் அன்னைக்கு சொரியும் மலர்களுடன்
சொரிகின்றேன் மலர்கள் தான் ஒவ்வொரு பௌர்ணமி...மியிலும்
காயங்களை காலங்கள் ஆற்றலாம் ஆனால்...

**என்றும் உங்கள்**
**மருமகன் என்ற கர்வத்துடன்**
**வே.த. காண்டீபன்**

காக்கை கரவரக் கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள.

# அருள் வாக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பார்த்துக் கெட்டது | - | பிள்ளை, | பார்க்காது கெட்டது | - | பயிர். |
| இட்டுக் கெட்டது | - | காது, | இடாது கெட்டது | - | கண். |
| கேட்டுக் கெட்டது | - | குடும்பம், | கேளாது கெட்டது | - | கடன். |
| உண்டு கெட்டது | - | வயிறு, | உண்ணாது கெட்டது | - | உணவு. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மருமகனின் உள்ளக்குமுறல் புலத்திலிருந்து ஓர் புலம்பல்

புலத்திலிருந்து ஓர் புலம்பல்
புலம்பும் இவன் மரு (மறு) மகன்
உங்களை என் கண் கண்டதும் இல்லை (என்றா)
உண்டு "மகிழ்ந்ததுமில்லை"
தொலை தூரத்திலிருந்து தொலை பேசியுடாக
மனம் கசிந்து உருகி உரையாடியது உண்டு
அன்பின் உருவமாய் பண்பில் உறை விடமாய்
எம் எல்லோர்க்கும் அன்னையுமாய் இருந்தது
நீங்கள் இருந்தது அன்றோ அத்தை
உங்கள் திருமுகம் தன்னை ஒரு முறையேனும்
யான் கண்டதில்லை அந்த வான்மதி நிலவின்
ஒளியிலிருந்து உண்டு "களித்து" மனம் மகிழ்ந்ததும் இல்லை
தொலை தூரத்திலிருந்து தொலைபேசியூடே "தம்பி""மருமேன்"
என்பீர்களே......இன்னும் என் காதோரம் மீண்டும் மீண்டும்
ஒலிக்கிறது அந்த அழைப்பு அன்பிலும் அன்பாய் பண்பாய்
அழகினில் ராணியுமாய் எம் எல்லோர்க்கும் எல்லாமாய் ஆகிய
எங்கள் அத்தையே கதிரவன் சுட்டெரிக்கும் ஒரு சூரிய காலத்தில்
நாம் அங்கு வந்து உண்டு "கொண்டாடி" மனம் மகிழ்ந்து
பல கதைகள் பேசி ஆடிப்பாட எண்ணிய வேளையிலே
காலன் அவன் அந்த காலத்தை எமக்கு அருளாமல்
உம்மை கொண்டு தான் சென்றானோ ஐயகோ என்ன கொடுமை
இது, எம் நெஞ்சம் வெடித்துத்தான் சிதறியதோ
கண்களில் அலை அலையாய் கண்ணீருமாய் எம் உள்ளம் எல்லாம்
துயரமுமாய் நாவறைத்து நின்றேனே
அத்தையே என் அத்தையே உன் ஆத்மா
அமைதியடைய எல்லாம் வல்ல எம் இறையை
வேண்டி நிற்கின்றேன்.

**என்றும் உங்கள் நீங்கா நினைவுடன்**
**மரு (மறு) மகன் இவன்**
**நீலவண்ணன் நரேந்திரநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஈதல் இசைபட வாழ்தல் அஃதன்றி
ஊதிய மில்லை உயிர்க்கு

# என் இதயத்தில் இருந்து அத்தைக்கு

என் அத்தையின் அன்புத் தொல்லை அதிகம் அதனை எழுதிவிட முடியாது ஆனால் அனுபவிக்க முடிந்தது.என்னை மருமகனாக பார்த்தது இல்லைஅவர்தம் மகனாக பார்த்தமை மற்றும் சகல கதைகளையும் வஞ்சகம் இல்லாது கூறியமை எல்லாம் இங்கு என் உள்ளத்தில் உறங்கிக் கிடந்த நினைவுகளாக, உணர்வுகளாக உறுத்துகின்றன. அவருக்காகவே தினமும் வந்து போவது வழக்கம் எந்த நேரமும் எனது முன்னேற்றத்திற்காக பல அறிவுரை கூறி கொண்டு இருப்பார். கோபம் வந்ததே கிடையாது

அவர் தினமும் என்னுடன் கதைக்கும் போது அடிக்கடி கூறுவது நான் வாழ்கின்ற காலம் கொஞ்சம் நான் யார்மீதும் கோபிக்க மாட்டேன், எல்லோரும் எனக்கு வேண்டியவர்கள். "நான் எல்லோருடனும் கதைப்பேன் பழகுவேன்".என்ற அந்த உயரிய கொள்கையை தன்னகத்தே கொண்டு வாழ்வாங்கு வாழ்ந்தவர் எல்லோரும் ஒன்று சேர்ந்து புனித தகனத்திற்கு வழியனுப்பியமை அவரில் இருந்த பாசப் பிணைப்பினை, உணரமுடிந்தது.

"ஓம் பிரம்மமே அம்மா நம ஓம்"

யோ.கேதீசன்.

**"When the doors are open to within my light comes from within me. My darkness is removed. Joy comes from within me and my sadness and pain vanish."**

"Maharaji"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமிக்கு அஞ்சலி

எனது ஆசை அத்தையே நான் எப்படி நம்புவேன் உங்கள் மரணசெய்தியை உங்களை நேரே பார்த்ததில்லை. உங்களைப் பார்க்க வேண்டுமென்று எவ்வளவு ஆசை கொண்டேன். எனது ஆசை நிராசையானது. காலவன் முந்திக் கொண்டுவிட்டான். எங்கள் மகளை பார்க்க வேண்டு என்று எவ்வளவு ஆசைப்பட்டீர்கள் எப்படியாவது அதனை நிறைவேற்ற நினைத்திருந்தேன் எங்களுக்கு கொடுத்து வைக்கவில்லை. உங்கள் அரவணைப்பில் சிலநாட்களாவது வாழ்ந்திருந்தால் மனம் ஆறியிருக்கும்.

இனி நாங்கள் உங்களை எந்த ஜென்மத்தில் பார்க்க போகின்றோம். எத்தனை ஜென்மம் நீங்கள் எடுத்தாலும் உங்கள் மருமகளாகவே நான் வரவேண்டும்.

உங்கள் அன்பின் மருமகள்
கு. அனுரதி

## மாமியாருக்கு அஞ்சலி

நடந்தது பொய்யாக இருக்ககூடாதா? என்று என்னால் இன்னும் நம்பமுடியவில்லை எனக்கு கிடைத்த அத்தைபோல் யாருக்கும் கிடைக்க முடியாது, என் கணவர் மீதும் என்மீதும், பிள்ளைகள்மீதும் மிகவும் வாஞ்சையும் பாசமும் உடையவர், சுடுசொல் சொல்லாதவர், எல்லோரையும் அரவணைப்பவர். எங்களுக்கு மிகச் சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர். அவர் எப்போதும் என் நெஞ்சில் நிறைந்திருப்பார் எங்கள் குடும்பத்திற்கு வழிகாட்டியாக இருப்பார்.

மருமகள்
க. லதா
ஆசிரியை .யா/வட்டு மத்தியகல்லூரி

ஒன்றை நினைக்கில் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் – ஒன்றை
நினையாது முன்வந்து நிற்பினும் நிற்கும்
எமையாளும் ஈசன் செயல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு குறள்

# அம்மா நின்புகழ் பெரிது

பொன்னிறப் பட்டுமேனி பொலிதரு தோற்றம் பூரணமதி வதனம், புன்னகை பூத்த முகம், நற்கருமங்களுக்கு உதவுதல்,உறவு பாராட்டி ஒழுகுதல், பிறர்நலம் பேணல், அன்பொழுகப்பேசுதல் இவை அனைத்தையும் கொண்டவர்தான் அப்பா முதலித் தோட்டத்திலே பூத்த இந்த றோசாப்பூ. இவரே அமரத்துவம் எய்திய திமதி .விமலராணி காங்கேயநாதன் அவர்கள். இவர்புகழோடு வாழ்ந்தார், புகழோடு மறைந்து விட்டார்
"தற் காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற் காத்துச் சோர்விலாள் பெண்"
என்னும் வள்ளுவர் வாக்குக்கு இலக்கணமாய் கணவனைக் தெய்வமாக்கி, அன்பு மக்களைக் கட்டிக் காத்து, சுற்றம் தழுவி நல்விருந்தோம்பி இல்லுறை தெய்வமாய் வாழ்ந்தார். செயற்கரிய சேவைபல நாட்டிற்கும் வீட்டிற்கும் செய்தும் வந்தார்.

இளம் வயதில் தந்தையை இழந்த இவர் அன்புத் தாய் மாமனார் இராசவைத்தியர் அ.க. குமராரசாமி J.P அவர்கள் அரவணைப்பில் வாழ்ந்து வந்தார். இவர் பருவம் எய்தியதும் மாமனார் அவர்கள் இவரை இல்லறம் என்னும் தொல்லறம் புணர்த்தி வாழ்தர வைத்திடும் பெரு விருப்பால் தங்குடிக்கு ஒத்த தகவுசால் நம்பி பொன்னுச்சாமி செய்த பெருந்தவத்தால் உதித்தவன்அன்பும் அருளும் அறமும் கெழுமிய இன்தமிழ் தொல் குடிந்தோன்றல் பொறியலாளர், எவர்க்கும் பழகுவதற்கு இனியவன், காங்கேய நாதன் அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தார்.

அம்மையார் அவர்களுக்கு இரண்டு வகையான சிறப்புக்கள் உண்டு. ஒன்று பிறந்த இடச் சிறப்பு மற்றையது புகுந்த இடச் சிறப்பு இருவகைச் சிறப்புக்களைக் கொண்ட இவர் குடும்பத்தினர் கல்வி, வீரம், செல்வம் போன்றவற்றில் சிறந்து விளங்கின்றனர்..

இவரின் ஆன்மா சாந்தியடைய சிவபுரத்தரசன் வட்டூர் விசாலாட்சி உடனுறை விசுவேசப் பெருமான் பொன்னடிப் போதினைப் போற்றித் துதிக்கின்றேன்

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**சிவன்கோவிலடி** — **வைத்திய கலாநிதி அ.க.கா.சுமந்திரன்**
**வட்டுமேற்கு** — **தர்மகர்தா விசாலாட்சி சமேத**
**வட்டுக்கோட்டை** — **காசிவிஸ்வநாதர் தேவஸ்தானம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## அமரர் திருமதி.விமலராணி காங்கேயநாதன் 21.02.2010 இறைவனடி சேர்ந்து உள்ளார்

எப்ப நான் வந்தாலும் அப்பம்மாவின் பீஸ்கட்டை உண்பேன், அப்பம்மாவும் விடாது பீஸ்கட் தருவார். என்ன சாப்பாடு செய்தாலும், சிரிச்சு சிரிச்சு தருவார்.

அப்பம்மாவின் சாப்பாடு நல்ல சோக்காயிருக்கும் என்னாலை அப்பம்மாவை நினைக்காமல் இருக்க முடியவில்லை பாட்டி வடை சுட்ட கதை இப்பவும் சொல்ற மாதிரி இருக்கு "நாலும், இரண்டும் சொல்லுக் குறுதி" எண்டு சொல்லித் தந்தவ இது நாலடியார் எண்டு வடிவாச் சொன்னா.

**பேரன்**
**க.பவித்திரன்**

> குழலினது யாழினிது என்பதம் மக்கள்
> மழலைச் சொல்கேளா தவர்.

## அம்மம்மாவிற்கு அஞ்சலி

நான் அம்மம்மாவை சிறு வயதில் தான் பார்த்திருந்தேன் இந்தவருட கோடை வீடுமுறைக்கு ஊருக்கு வர இருந்தோம் அதற்குள் அம்மம்மா இறந்ததை நினைக்கும் போது அழுகை வருகின்றது. அம்மம்மாவுக்கு முன்னால் பரதநாட்டியம் ஆடிக்காட்ட வேண்டும் என்று ஆசையிருந்தது அது முடியாமல் போய்விட்டது அம்மம்மாவுக்கு என் கண்ணீரால் அஞ்சலி செலுத்துகின்றேன்

**உங்கள் அன்புப் பேர்த்தி**
**தி.சாளினி**

> சொல்லாமலே செய்வார் பெரியர் சொல்லிச் செய்வார் சிறியர்
> சொல்லியுஞ் செய்யார் கயவரே – நல்ல
> குலாமாலை வேற் கண்ணாய் கூறுவமை நாடில்
> பலா மாவைப் பாதிரியைப் பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மம்மாவிற்கு

அம்மம்மா இறந்த செய்தியை என்னால் நம்பமுடியவில்லை. இந்த வருட கோடை கால விடுமுறைக்கு ஊருக்கு வந்து அம்மம்மாவை பார்க்க இருந்தோம், அது நடக்கவில்லை நான் ஆர்வமாக கற்றுவரும் வயலினை அம்மம்மாவற்கு வாசித்து காட்ட எண்ணியிருந்தேன் தேவாரம் பாடிக்காட்ட ஆசைப்பட்டேன். எனது அம்மம்மா இல்லை என்பதை நினைக்க மனம் கசப்பாக இருக்கின்றது எனக்கு அம்மம்மா முட்டைமா அனுப்புவது வழக்கம் அம்மம்மா அனுப்பும் முட்டைமா எனக்கு பிடிக்கும் இனி முட்டைமா அனுப்ப அம்மம்மா இல்லை என்று நினைக்கும் போது அழுகை வருகின்றது அம்மம்மாவிற்கு எனது கண்ணீர் அஞ்சலி.

**உங்கள் அன்பு பேரன்**
**தி.கௌதமன்**

> மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு

## அம்மம்மாவிற்கு அஞ்சலி

எனக்கு அம்மம்மாவை ரொம்பப் பிடிக்கும் நான் கைக்குழந்தையாக இருக்கும் போது என்னை அம்மம்மா தூக்கி வைத்திருந்தா வீடியோவை அடிக்கடி போட்டு பார்ப்போம். இப்போது அம்மம்மாவை பார்க்க ஆசைப்பட்டேன் அது முடியாமல் போய்விட்டது அம்மம்மாவிற்கு எனது அஞ்சலி

**உங்கள் அன்புப் பேரன்**
**தி.கபிலன்**

"The joy that you seek, already exists in the heart of every single human being. All that you have to do is awaken to this possibility."

**"Maharaji"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரிக்கு அஞ்சலி

நீமறைந்த செய்தி கேட்டு என்னால் அழக்கூட முடியவில்லை. என் நினைவு எங்கள் சிறுவயது வாழ்க்கையை சுற்றி வருகின்றது. பெரியம்மாவின் அரவணைப்பில் அன்பாகவும் மரியாதையாகவும் வளர்க்கப்பட்டோம் எங்களை நல்ல கல்லூரிகளில் மாமா படிப்பித்தார். நல்லவற்றைத் தேடித்தந்தார் நாங்கள் ஒருவருக் கொருவர் துணையாகவும் அன்போடும் வாழ்ந்து வந்தோம்.

காலம் எங்களை பிரித்து விட்டது நான் பிரான்ஸ்க்கு வந்துவிட்டேன். நான் ஊரில் இடைக்கிடை தொலைபேசி கதைத்தாலும் கூடி இருந்து வாழ முடியவில்லை. என்ற ஏக்கம் வாட்டிக் கொண்டே இருந்தது.

எனது சகோதரிகள் ஒவ்வொருவராய் பிரிகின்றார்கள் உன் மரணவீட்டில் கூட கலந்து கொள்ளக் கூட முடியாமல் பரிதவிக்கின்றேன். எங்கே இனி காண்பேன் என்னை நீ "செல்லக்கா" என அழைக்கும் பாசக்குரல் எப்போது கேட்பேன் எப்படி என் மனம் ஆறுவேன்.

**அன்புச் சகோதரி**
**செ. இராசமலர்**

நீறில்லா நெற்றியாழ் நெய் இல்லா உண்டி பாழ்
ஆறில்லா ஊருக்கு அழகுபாழ் - மாறில்
உடன்பிறப்பு இல்லா உடம்பு பாழ் பாழே
மடக்கொடி இல்லா மனை.

## தந்தையை விஞ்சிய மைந்தர்

| | |
|---|---|
| சிவபெருமான் | - முருகன் |
| தசரதன் | - இராமன் |
| இராவணன் | - இந்திரசித்து |
| அர்ச்சுனன். | - அபிமன்யு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரிக்கு அஞ்சலி

எங்கள் அன்பு சகோதரி காங்கேயநாதன் விமலராணியின் மரணச் செய்தி கேட்டுஅதிர்ச்சி அடைந்தோம். எங்களால் முதலில் நம்ப முடியவில்லை ஏன் இப்போதும் நம்பமுடியவில்லை அன்னாரும் நாங்களும் அண்ணன், தம்பி பிள்ளைகளாக இருந்தாலும் கூடப்பிறந்த சகோதரர்கள் போலவே வாழ்ந்தோம். சிறுவயது முதல் நாங்கள் கூடவே இருந்தோம். அந்தக் காலங்களை நினைக்கும் போது துக்கம் நெஞ்சை அடைக்கின்றது. வளர்ந்து திருமணம் செய்த பின்பு எங்கள் பாசம் தொடர்ந்தே வந்தது. சகோதரிக்கு எங்கள் ஆழ்ந்த அஞ்சலி செலுத்துகின்றோம்.

**அ.குணசேகரம்**
**அ.சிறிராஜசேகரம்**
**அ.சாவேஸ்வரன்**
**அ.தங்கேஸ்வரன்**

# பேரன்பு பூண்ட பெரியம்மாவிற்கு அஞ்சலி

பெரியம்மாவின் மரணச் செய்தியை கேட்ட போது என்னால் நம்ப முடியவில்லை. சிறுவயதிலிருந்து கூட்டுக் குடும்பமாக வாழந்த எங்களது பெரியப்பாவும் பெரியம்மாவும் எங்களைப்பாசமாக தங்கள் பிள்ளைகளைப் போலவே வளர்த்தார்கள். பெரியப்பாவின ஆத்மபலமாக இருந்த பெரியம்மா எப்படி அவரை பிரிந்து போக மனம் வந்தது உங்கள் பிரிவை அவர் எப்படி தாங்குவார் நாங்கள் உங்கள் பாசமுகத்தை எங்கு காண்போம்.உங்கள் பிரிவினால் நான் ஆவினை இழந்த நாகு இளம் கன்று போல் துய்கின்றேன்.

**உங்கள் பிரிவை மறக்க முடியாத மகன்**
**ச.குகன்**

"When you are conscious, this life holds promises after promises, gifts after gifts for you, Accept them."

**"Maharaji"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தன் உண்மை உருவைக் காணும் சாத்தியம் படைத்தவர்..விமலராணி அம்மா.

**கலாநிதி. சிவக்கொழுந்து சிறிசற்குணராசா**
**கணித விரிவுரையாளர்**
**யாழ் பல்கலைக்கழகம்.**

காலம் சென்ற திருமதி விமலராணி காங்கேயநாதன் தன் வாழ்வின் உன்னத பயனான பிறவிப்பயனை அனுபவிக்கும் சாத்தியத்தை மகராஜியின் கருணையாலும் தனது சிரத்தையாலும் பெற்றுக்கொண்டவர். அவர் தன் வாழ்நாளில் ஏனையோருக்கும் அந்த சாந்தியின் சாத்தியத்தை அறிமுகம் செய்ய வேண்டும் என்பதில் ஆவலாக இருந்து மகராஜியின் "அமைதிக்கான செய்தி - "words of peace" நிகழ்வுகளில் உற்சாகத்துடன் பங்குபற்றி வந்தார்.

இப்பெருமாட்டியின் மகன் திரு.கண்ணன் முன்பு எனது மாணவனாகவும் தற்போது யாழ் பல்கலைக்கழகத்தில் கணித விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார். அவரது ஏனைய பிள்ளைகளையும் அறிகின்ற வேளையில் அவர் ஒரு சிறந்த தாயாராகவும் திரு.காங்கேயநாதனின் குடும்பத் தலைவியாகவும் இல்லற வாழ்வின் எல்லா பொறுப்புக்களையும் செவ்வனே நிறைவு படுத்தி இவ்வுலகை விட்டு பிரிந்து சென்றுள்ளார் என உணர்கின்றோம்.

இப்பெருமாட்டியின் நினைவு மலரில் எமது ஆசானான மகராஜியின் பின்வரும் ஒரு செய்திக் குறிப்பினை பகிர்வதில் மகிழ்வடைவதுடன் விமலராணி அம்மாவின் ஆத்ம சாந்தியடைய யாழ் பல்கலைக்கழக கணித புள்ளிவிபரவியல் துறையினர் சார்பில் பிரார்த்தித்து அமைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகராஜியின் செய்திக்குறிப்பு: உண்மையான வாழ்வு

நானும் மனிதன். நீங்களும் மனிதா். நம் உலக வாழ்க்கையில் இன்பமும் உண்டு துன்பமும் உண்டு. இன்பத்தின்பொழுது அதன் லாபத்தை அடைய வேண்டும் என்று முயற்சிக்கின்றோம். ஆனால் துன்பத்தின்பொழுது அதிலிருந்து எப்படி தப்பிப்போம் என்று எல்லா ஜீவராசிகளைப்போன்று நாம் கவலைப்படுகின்றோம். பெரும்பாலும் நாம் யாா்? நாம் என்ன? என்பது நமக்குத் தெரிவதில்லை. இந்த உலகத்தின் நல்லது – கெடுதல்களுக்கு அப்பாற்பட்டது இந்த மெய்ப்பொருள்.

இவ்வுலகத்தில் மனிதன் எனக்கு என்ன ஆயிற்று. நான் என்ன அடைந்தேன். எதை நழுவவிட்டேன். எதை பெற்றுக்கொண்டேன் என்று கவனிக்கிறான். ஆனால் இறைவன் அவனுக்கு என்ன அளித்துள்ளாா் என்று கவனிப்பதில்லை. இறைவன் அவனுள் என்ன வைத்திருக்கிறாா்? ஒவ்வொருவரின் உள்ளும் ஒரு சிறப்பு இருக்கிறது. அந்த சிறப்பை எப்படியாவது முன்னே கொண்டுவருவது நமது வேலை. அது உண்மை அழகின் சிறப்பு! உண்மை மனிதத்தன்மையின் சிறப்பு – எல்லோருடைய இதயத்திலும் வீற்றிருக்கும் அந்த உண்மை மனிதத்தன்மை. அது இந்த உலகத்தில் இல்லை ஆனால் ஒவ்வொரு மனிதனின் உள்ளும் அவா் யாராக இருந்தாலும் சாி எங்கு இருந்தாலும் சாி எல்லோருடைய உள்ளும் வீற்றிருக்கிறது. படைப்பாளி ஒவ்வொருவருக்கும் அவ்வளவு சிறப்பு அவ்வளவு அன்பு கொடுத்திருக்கிறாா். மக்கள் "கொடுத்திருக்கிறாா் என்றால் ஏன் தெரியவில்லை? ஏன் கண்ணுக்குத் தெரியவில்லை?" என்று கேட்கிறாா்கள். கவனியுங்கள் உங்கள் முகத்தை நீங்கள் பாா்க்கவேண்டுமானால் கண்ணாடி தேவை. நீங்கள் உங்கள் முகத்தைப் பாா்க்கமுடியாது மற்றவா்கள் முகங்களைப் பாா்க்க முடியும். ஆனால் உங்கள் முகத்தையே பாா்க்கக் கண்ணாடி அவசியம் எப்படிப்பட்ட கண்ணாடி – அதில் நம் இதயத்தினுள் உள்ள அந்த பொருளின் உண்மை அடையாளத்தைக் காணமுடியும். அதுவே நாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

மனிதன் எல்லாற்றையும் எண்ணங்களால் பிடிக்க முயற்சிக்கிறான். ஆனால் பசிக்கும்பொழுது எண்ணங்களால் ஆன சப்பாத்தி சரிப்படாது. பசியை அடக்க மாவைக்கொண்டு செய்யப்பட்ட உண்மை சப்பாத்தியே தேவை.

ஒருவர் நான் உணவை வர்ணிக்கிறேன் உங்கள் பசி தீர்ந்துவிடும் என்று கூறினால் பசி அதனால் தீராது. தாகம் தணிக்க தண்ணீ தேவை. இந்த வாழ்க்கையை பயனடையச் செய்ய அனுபவம் தேவை. இந்த வாழ்க்கையை பயனடையச் செய்ய எல்லோருடைய இதயத்திலும் வீற்றிருக்கும் சுதந்திர உணர்வு தேவை. அதுவே உண்மை சுதந்திரம். ஒருவரும் பறிக்கமுடியாத அப்படிப்பட்ட சுதந்திரம் – ஆம் தன் வாழ்க்கையில் ஒருவரும் அழிக்கமுடியாத அப்படிப்பட்ட சுதந்திரம். ஒரு அறியாமையாலும் அசைக்கமுடியாத அப்படிப்பட்ட ஞானம்! அதனால் அவசியமான அந்த சாந்தியை புரிந்துகொள்ளுங்கள். உண்மை சாந்தி முன்னதாகவே உங்களுள் உள்ளது. விசயம் குழப்பமடையவேண்டியது இல்லை. விசயம் உண்மை வாழ்க்கையைப் பற்றியது. உண்மை வாழ்வு என்ன? நாம் மற்றவர்களுக்காக வாழ்வது உண்மை வாழ்க்கை அல்ல. நமக்காகவே வாழ்வது எந்த சூழ்நிலையிலும் நமக்காகவே வாழ்வது. அதில் நம்முள்ளிருக்கும் மெய்ப்பொருள் பிரகாசிக்கட்டும் அதில் நம்முள்ளிருக்கும் மனிதத்தன்மை பிரகாசிக்கட்டும்.

நம் உள்ளிருக்கம் அந்த இடத்தை நாம் அடைந்துவிட்டோமா? நம் உண்மை உருவம் என்ன என்ற அந்த விசயம் நமக்க தெரியுமா? முழு உலகத்தையம் படைத்தவர் தன் வீட்டை எங்கு செய்துகொண்டார்? அவர் தன் வீட்டை நமக்குள் செய்துகொண்டார். ஆம்.

நமக்குள்! நம் எல்லோருடைய இதயத்திலும்! அவர் இரக்கமுள்ளவர் ஒவ்வொரு மூச்சம் அந்த தயவின் அடையாளம்தான். நான் நல்லதோ கெட்டதோ மூச்சு வந்துகொண்டும் சென்றுகொண்டும் இருக்கின்றது. இதுவே அந்த படைப்பாளியின் அருள். ஆனால் படைப்பாளி நமக்குள் கட்டியுள்ள அந்த கோவிலுக்கு நீங்கள் சென்றிருக்கின்றீர்களா? அந்த வீட்டிற்கு நீங்கள் சென்றிருக்கின்றீர்களா?

நான் எப்பொழுதும் இவ்வுலகிலுள்ள ஒவ்வொருவருக்கும் அவ்வாறான சென்றடையும் சாத்தியத்தை வழங்குவதில் ஈடுபட்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஒரு தீபம் அணைந்துவிட்டது

வட்டு வடக்கு சித்தன் கேணிப்பதியில் வாழ்ந்து இறைவன் திருவடியடைந்த அமரர் விமலராணி காங்கேயநாதன் அவர்கள் நினைவு எங்களைவிட்டு என்றும் நீங்காது திரு காங்கேயநாதன் அவர்களின் தவப்பயன் தான் விமலராணி அவர்களை மனைவியாகக் கிடைக்கச் செய்துள்ளது. திரு காங்கேயநாதன் அவர்கள் வட்டு இந்துக்கல்லூரியில் அதிக அக்கறை கொண்டவர். மாணவர்கள் நலனில் நாட்டமுடையவர் ஆங்கில பாடத்தை மாணவர்கள் கற்றுத் தேர்ச்சி பெற வேண்டும் என்ற ஆர்வத்தினால் அம்மாணவர்களுக்கு இலவசமாக ஆங்கில பாடத்தைக் கற்பித்து அவர்கள் உயர்வுக்குக் காரணமாக உள்ளவர்

இவ்வகையில் அவர் செயற்படுவதற்கு மிகுந்த உறுதுணையாக அமைந்தவர் அவருக்கு வாய்க்கப் பெற்ற மனைவி விமலாராணி ஆவார் தனிப்பட்ட வகையில் கூட பலர் ஆங்கிலத்தில் சித்திபெற திரு காங்கேயநாதன் உதவி புரிந்துள்ளார். என்றால் இதற் கெல்லாம் வழிகாட்டியும், ஊன்று கோலாகவும் இருந்து துணையாகச் செயற்பட்டவர். அமரர் விமலராணி அவர்களேயாவர் அத்தீபம் இன்று அணைந்துவிட்டது.

**"தற்காத்துக் தற்கொண்டான் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்வு இலாள் பெண்"**

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க கணவனுக்கு உகந்த மனைவியாய் சகல கலைகளிலும் வல்லவராய், பெண்ணிற் பெருந்தக்கவளாய் வாழ்ந்து இவ்வுலகை விட்டுச் சென்றுவிட்டார். அவர் நீண்ட காலம் வாழ வேண்டியவர் என் செய்வது விதி சதி செய்துவிட்டது.

**" துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து**
**இறந்தாரை எண்ணிக்கொண்டு அற்று"**

துறவு பூண்டவர்களின் பெருமை இறந்தோரின் எண்ணிக்கையை அளவிடுவதற்கு ஒப்பானது. அவர் நல்லுலகம் சென்றுவிட்டார். பிறந்தவர் இறப்பது நியதி. எனவே அவர் பிரிவை நாம் தாங்கவேண்டியுள்ளது. அவர் யாவர்க்கும் விண்ணில் இருந்து துணை செய்வார் எனக்கூறி அன்னாருக்கு எனது கண்ணீர் பூக்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**திருமதி ஜெகதீஸ்வரி அருன்மயம்**
**அதிபர்,யா/ வட்டு இந்துக்கல்லூரி**
**(நவோதய)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புமிகு மாதரசி விமலராணி புகழுடம்பு கோலம் பெற்றார்

வாழ்க்கையில் அன்பும் ஆற்றலும் பெற்று மற்றவர் மதிக்க வாழ்வது என்பது அரிய சாதனை. எல்லோராலும் அது முடிவதில்லை. பலரும் சராசரியாக வாழ்ந்து விட்டே மடிகிறார்கள். ஆனால் நற்குணமும் நற்பண்பும் மிக்கவர்கள் பலராலும் பாராட்டும் பெற்று குடும்ப விளக்காய் ஒளி வீசி உயர்ச்சி பெற்றுள்ளனர். அந்த வரிசையில் உள்ள அமரத்துவம் எய்திய திருமதி காங்கேயநாதன் விமலராணி என்ற எனது அருமைச் சகோதரியை நினைத்து யான் படும் வேதனை இன்னும் என்னால் தாங்க முடியாது தடுமாறுகின்றேன். இவரின் பெருமை அளப்பெரியது. எவருடனும் அன்பாக சிரித்துப் பேசும் குண இயல்பினால தெரிந்தவர்களை எல்லாம் தன் உடன் பிறப்புக்கள் ஆக்கிய உத்தமி அவர்.

"தற்காத்து தற் கொண்டான் பேணி தகை சான்ற
சொற்காத்து சோர்விலான் பெண்"

என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவர் வாக்குக்கொப்ப வாழ்ந்து காட்டிய பெருமகள் அவர்.

யான் அண்மையில் எனது மகனுடன் லண்டனில் இருந்தபோது தனது மகள் எனது மருமகள் சசியுடன் என்னை இருக்குமாறு வேண்டிக் கொண்டார். அப்படியே மகளிடமும் அண்ணாவை நன்கு உபசரித்து உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டார். இப்படி பாசமிகு பாக்கியவதி எனது தங்கை.

இப்படியான மேலான குணம் படைத்த அன்னாரது திடீர் மறைவுக்கு எமக்கு மீட்க முடியாத பேரிழப்பு. அவரது பிரிவால் அல்லலுற்று மீளாத்துயரில் வாழும் அவரது அருமைக் கணவர் பிள்ளைகள் சுற்றத்தவர்கள் அனைவர்க்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள். அவரைத் தெரிந்த ஆயிரக்கணக்கானோர் நினைவில் அவர் நிலைத்திருந்து ஒளி வீசுவார் இது திண்ணம். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல எம் பெருமானை மனமுருகி வேண்டிக் கொள்கிறேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி

சமூகசோதி, சமூகமணி
வே.தம்பையா
(ஓய்வுபெற்ற அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வின் மேன்மை

அரிது அரிது மனிதராகப் பிறப்பது அரிது மானிடப் பிறப்பே சிறப்பானது. இப்பிறப்பை எடுத்த மனிதன் தன்னை உணராது வாழ்கின்றான். உலக வாழ்க்கையை பெரிதாக எண்ணி வாழும் மனிதன் தன்னை உணராது உலக இன்பத்தில் உழலுகிறார்.

மனிதனின் உடம்பையே ஆலயமாக அமைக்கப்பட்டுள்ளது மனிதன் தன்னை உணரும் போது தனது உண்மை நிலையை அறிந்து கொள்கின்றான். உண்மையான குருவை அடையும் போதே உண்மை நிலையை அறிய முடியும் இவ்வுலகிலே பிறந்து வளர்ந்து எப்படியும் வாழலாம் என்று நினைக்கிறான் ஆனால் வேதங்களும், இதிகாசங்களும் மனிதன் இப்படித்தான் வாழ்ந்து பெருநிலையை அடைய வேண்டும் என்ற உண்மை நிலையை எடுத்துக் கூறுகின்றன. அண்டத்திலே உள்ளன பிண்டத்தில் உள்ளன. ஐந்து பூதங்களால் ஆக்கப்பட்ட உடலை இறைவன் என்ற ஒரு சோதிப் பொருள் இயக்குகின்றது என்று உணர முடிகின்றது மனிதனின் உடலை இடகலை, பிங்கலை என்ற சுவாசநிலையால் இயக்கப்படுகின்றது. அடிவயிற்றில் குண்டலியினி என்ற சக்தி உடலை அருள் நிலைக்கு கொண்டு வருகின்றது.

மனிதனுக்கு மூன்று விதமான உடம்பு இருப்பதாக அறிகின்றோம். அவை தூல, சூக்கும, காரணமான மூன்று நிலையுமாம் எனது உடம்பு தூல சரீரமாகும் இது எப்படியும் நிலையில்லாதது எந்த நேரத்திலும் இது அழியக் கூடியது. இதை நிலையானது என்று தான் மனிதன் தன்னை மறந்து ஆசை வசப்பட்டு நினைக்கின்றான். ஆனால் உடலை விட்டு ஆன்மா பிரிந்ததும் தான் அறிகின்றான் உடல் அழிந்தாலும் ஆன்மா அழிவதில்லை சூக்கும நிலையில் மாறுகின்றது. இதற்காக சமயக்கிரியைகள் செய்யப்படுகிக்றன.

மனிதன் நல்வினை, தீவினையாகிய இரண்டிலும் உழலுகின்றான் இதனை ஒளிப்பதற்கே பஞ்சாட்சர மந்திரம் ஓத வேண்டி இருக்கிறது. அது மட்டுமல்ல திருநீறு பூசி தனது மூன்று மலங்களையும் நீக்க வேண்டி ஏற்படுகின்றது. இதுவே நடராசரின் வழிபாடு இறுதியாக நிலைக்கின்றது. நடேசரின் வடிவம் பஞ்சாட்சர மந்திரமே. அதனை ஓத முடியாதவன் இவ்வுலக வாழ்க்கையில் கஷ்ரப்படுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

மனிதனின் உடலில் மூலதாரம் தொடங்கி ஆறு ஆதாரங்கள் இயங்குகின்றன. அதையே ஆறுமுக் கடவுளாகவும் ஆறு ஆதாரங்களாகவும், ஆறு அறிவாகவும் எடுத்ததுக் காட்டப்பட்டுள்ளன. ஆறு ஆதாரங்களுக்கும் ஆறு வடிவங்களை நம் முன்னோர் நமது வழிபாட்டுக்கு சிலைவடிவில் தந்துள்ளார்கள். இத்தனையும் தத்துவநிலையை உடையன. அதைக் குரு மூலமாக அறிவதே சிறப்புடையது. இத்தனைக்கும் மேலாக சுழுமுனை நாடியாக எமது நெற்றியில் திகழ்கின்றது. இதனை அறிய வேண்டியவர் உண்மைக் குருவை அடைய வேண்டும். இதனை தியான மூலமாகவேதான் அறிய முடியும் மனிதனின் நிலை தெய்வீகமானது. அதை அறிவதற்கும் உணர்வதற்குமே கோவிலை கட்டி கும்பிட வைத்தனர் எம் முன்னோர்.

எமது கிராமத்தில் மூன்று பழமையான ஆலயங்கள் இருக்கின்றன. முருகையா ஆலயம், சிவன் ஆலயம், அம்மன் ஆலயம் ஆகும். இதனை தோற்றுவித்தவர்கள் சித்தர் நிலையில் இருந்து உண்மையை உணர்ந்த பெரியோராவர். இவ்வாலயங்களில் இன்றும் பூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. விமலராணியும் மைத்துனர் காங்கேயநாதனும் திருமணம் செய்து சிறப்பாக வாழ்ந்தவர்கள். இப்போது விதியின் நிலையால் நிலையாமை என்ற உண்மையில் சகோதரியை இழந்து நிற்கின்றேன். மனிதனது வாழ்வு நீரிற் குமிழியானது.

**ஆன்மீகச் சொல்வாரிதி**
**அறநெறிப் பாடசாலை . வடகொழும்பு**
**இ. சத்தியவான்.**

**ஔவையின் 4 கோடி**

**மதியாதார் தலைவாசல் மதித்தொருகாற் சென்று**
**மிதியாமை கோடி பெறும்**
**உண்ணீர் உண்ணீரென்று உபசரியார் தம்மனையில்**
**உண்ணாமை கோடி பெறும்**
**கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மொடு**
**கூடுதல் கோடி பெறும்**
**கோடானு கோடி கொடுப்பினும் நாக்**
**கோணாமை கோடி பெறும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் நயப்புரை

அவனி போற்றும் வட்டுக் கோட்டை சித்தன் கேணியில் இல்லறமென்னும் நல்லறத்தில் இனிதே வாழ்ந்து ஆயிரம் பிறைகண்டு அகிலமிதில் வாழ்ந்தவர் திருமதி விமலராணி காங்கேயநாதன் அவர்கள்.

அவர் சிறந்த தெய்வப்பற்றுள்ளவாராகவும் இருந்து வந்துள்ளார். தனது குடும்பத்தவருடன் இணைந்து இறைபணியிலும் தன்னை அர்பணித்தவர். பார்த்தவரை சிந்தை குளிர வைப்பவர், கலந்துரையாடியவரை உள்ளம் உவகை கொள்ளச் செய்வர், நல்லதொரு இல்லத்தரசி. தனது குடும்பத்தை சிறப்பாக வழிநடத்தி பிள்ளைகளையும் இல்வாழ்க்கையில் நிலைபெறச் செய்து பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்த்தவர். சமூக சேவை செய்வதில் பெரு விருப்புடையவர். வலிமேற்கு சனசமூக நிலையங்களின் சமாசதலைவராக இருந்து வந்த தனது கணவர் திருபொன் காங்கேயநாதன் அவர்கள் முன்பள்ளி ஆசிரியர் சங்கத்திற்கும், முன்பள்ளிகளுக்கும் சேவையாற்றுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்து வந்தவர்

இத்தகைய சிறந்த மாதரசி இன்றில்லையே என எண்ணும் போது கவலையெழுகின்றது. கண்ணீர் வருகின்றது. என் செய்வது யாவும் இறைவன் செயலே என ஆறுதல் பெறுவோம் . அமைதியுறுவோம் அன்னாரின் பிரிவுத்துயரால் வாட்டமுறும் அவரது அன்புக்கணவர், பிள்ளைகளுக்கு ஆறதலும் பரிவும் கூறுவதுடன் அமரரின் ஆத்மா சாந்திக்காக இறைவனின் பாதங்களை அன்புடன் பணிகின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!.**

**நா.நிரஞ்சனா**
**முன்பள்ளி இணைப்பாளர், ஆசிரியர்கள்**
**வலிகாமம் மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம்**
**வலிமேற்கு பிரதேசசபை**
**சுழிபுரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Where did you go?

I know, you like me very much, all are telling that you are my girl friend. When do you give mango and jack fruit. I am very sad

Your boy friend
Kandeepan Kowsick

## இரண்டு

வருவதும் போவதும் இரண்டு – இன்பம், துன்பம்.
வந்தால் போகாதது இரண்டு – புகழ், பழி.
போனால் வராதது இரண்டு – மானம், உயிர்.
தானாக வருவது இரண்டு – இளமை, மூப்பு.
தம்முடன் வருவது இரண்டு – பாவம், புண்ணியம்.
அடக்க முடியாதது இரண்டு – ஆசை, துக்கம்.
தவிர்க்க முடியாதது இரண்டு – பசி, தாகம்.
நம்மால் பிரிக்க முடியாதது இரண்டு – பந்தம் பாசம்.

## மூன்று

முத்தமிழ் – இயல், இசை, நாடகம்.
முக்கனி – மா, பலா, வாழை.
முச்சித்தர் – பிரமா, விஷ்ணு, உருத்திரன்.
முத்தொழில் – படைத்தல்,காத்தல், அழித்தல்.
முப்பால் – அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்.
முக்குற்றம் – காமம், வெகுளி, மயக்கம்.
முப்பொறி – மனம், வாக்கு, காயம்
மும்முரசு – வீரமுரசு, கொடைமுரசு, மங்கலமுரசு
மூவேந்தர் – சேரன், சோழன், பாண்டியன்.
மூவுலகு – பூமி, அந்தரம், சுவர்க்கம்.
திரிமனம் – அறிவு, நினைவு, புத்தி
திரிகடுகம் – சுக்கு, மிளகு, திற்பலி.

## அருள் வாக்கு

பார்த்துக் கெட்டது - பிள்ளை, பார்க்காது கெட்டது - பயிர்.
இட்டுக் கெட்டது - காது, இடாது கெட்டது - கண்.
கேட்டுக் கெட்டது - குடும்பம், கேளாது கெட்டது - கடன்.
உண்டு கெட்டது - வயிறு, உண்ணாது கெட்டது - உணவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# நேருஜீ சனசமூக நிலையம்
# NEHRUJEE COMMUNITY CENTRE

பதிவு எண்:-Regd No:~ 431:~19~10~56

Kalainagar
SITHANKERNY

கலை நகர்,
சித்தன்கேணி

போசகர்
PATRON
பொ.காங்கேயநாதன்

தலைவர்
President
இ.புரந்திரதேவன்

செயலாளர்
Secretary
தெ.ரவீந்திரன்

பொருளாளர்
Treasurer
சி. இளங்குமரன்

## நீங்காத நினைவுடன்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

(திருக்குறள் 236)

வட்டூர்தனில் கலைவளம் மிக்க கலைநகர்ப்பதியில் புகழோடு பூத்து புகழோடு மறைந்த மங்கையாகத் திகழ்பவர் அமரர் விமலராணி காங்கேயநாதன் அவர்கள். இவர் தம் மக்கட் செல்வங்களை சான்றோன் என்று அவனியுள்ளோர் விளம்பியவற்றை செவி நுகர நயந்த தாயாகவும் விளங்குவதுடன் இவர் தம் துணைவர் எமது நேருஜி சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவராகவும் தற்போதைய போஷகராகவும் விளங்குகின்றார். அமரர் விமலராணி தமது மூத்த புதல்வனை (கண்ணன்) கற்று வரும் சமூகத்தவர்க்கு முன்னோக்கு சிந்தனையுள்ள அச்சாணியாகத் திகழவைத்துள்ளார். முருகனை தம் குல தெய்வமாகக் கொண்டு தமது முருகையா கோயிலின் அறங் காவலர்களாக திகழ்வதுடன் நோயுள்ளபோதும இறை வணக்கத்தில் தளராத நம்பிக்கையும் கொண்டவர். அமரரின் இழப்பு குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் பேரிழப்பாகும். அன்னாரை இழந்து துயருற்றிருக்கும் குடும்பத்தாரிற்கு எமது ஆறுதலைக்கூறி அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நீதி இத் தாம் மாய்ந்தனரே"

நேருஜி சனசமூக நிலையம
பதிவு எண்:- 431-19-10-56
கலைநகர் - சித்தன்கேணி

தலைவர்
இ. புரந்திரதேவன்
நேருஜி சனசமூகநிலையமும்
கிராம அபிவிருத்தி சங்கமும்
கலைநகர் சித்தங்கேணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 28 ❖ 01 ❖ 1942



உதிர்வு 21 ❖ 02 ❖ 2010

அமரர்

## விமலராணி காங்கேயநாதன்

அவர்கள்

குடும்பத்தின் குலவிளக்கான விமலராணி அவர்கள் இறந்த செய்திகேட்டு எமது கழகமானது ஆழ்ந்த கவலை அடைகிறது. பிள்ளைகளை ஊர்மெச்சும் அளவிற்கு படிக்கவைத்து நல்ல பிரஜைகளாக உருவாக்கி இன்று மறைந்து போன தாயாருக்கு நாம் சிரந்தாழ்த்துகின்றோம்.

அன்னாரது கணவர் சமூகநலப் பற்றுக்கொண்டவர். நேருஜீ சனசமூக நிலையத்தின் தலைவராக இருந்து பணியாற்றி உள்ளமையும், அன்னாரது புதல்வர்கள் எமது கழகத்தின் வளர்ச்சிக்கு பங்கு பற்றியமையும், விரிவுரையாளர் கண்ணன் அவர்கள் எமது கழகத்தின் நிர்வாக உறுப்பினராக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

*தலைநகர்*
*சித்தன்கேணி.*

கலைநகர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும்
விளையாட்டுக்கழகமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபச் செய்தி

தோற்றம் 28 ❖ 01 ❖ 1942



மறைவு 21 ❖ 02 ❖ 2010





அமரர்

## விமலராணி காங்கேயநாதன்

அவர்கள்

வலிகாமம் மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தலைவர் பொ. காங்கேயநாதன் அவர்களின் அன்பு மனைவி விமலராணி அவர்களின் மறைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

முன்பள்ளி இணைப்பாளர் ஆசிரியர்கள்
வலிகாமம் மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இதய அஞ்சலி

உதிர்வு

௨8

01

19௪௨



மறைவு

௨1

0௨

௨010

அமரர்

## விமலராணி காங்கேயநாதன்

வேரூன்றி பல்திசையில் கிளையெறிந்து
விழுதோடி நிழலோடி இதம் தந்து
விசாலித்த மாதே!
வையகத்தில் தங்கள் சிறிசுகள்
காலோடி நிமிர்ந்த வேளையில்
உங்கள் இலையுதிர் காலம்
நிறைவு பெற்றதோ!
எனினும் கலங்கிடல் தவிர்ப்போம்
சான்றோரை ஈன்றோர்
மாண்டதுண்டோ?
நித்தியம் உடலம் மீண்டதில்
புதிய பிறப்புக்கள் கண்டோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அனைத்து உறவுகளுக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

செலிங்கோ இன்சூரன்ஸ் பிறைவற் லிமிட்டற்
சாவகச்சேரி கிளை
முகாமையாளர், ஊழியர்

குமாரகோட்டம்
சித்தன்கேணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறக்கப் போகும் குழந்தை ஆணா பெண்ணா என்பதை அறிந்து கொள்வதற்கான

### புராதன அட்டவணை

| | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 | 43 | 44 | 45 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Jan | o | x | o | x | o | x | x | o | x | o | x | o | x | x | x | o | x | x | o | x | o | x | o | x | o | x | x | o |
| Feb | x | o | x | o | x | x | o | x | o | x | o | x | o | o | o | x | o | x | x | o | x | o | x | o | x | o | x | x |
| Mar | o | x | o | o | x | o | x | x | x | o | x | o | o | x | x | x | x | o | x | x | o | x | o | x | o | x | o | x |
| Apr | x | o | x | o | o | x | x | o | o | x | o | o | o | o | o | x | o | x | o | x | x | x | x | o | x | o | x | o |
| May | x | o | x | o | x | x | o | o | o | o | o | x | o | o | o | o | o | o | x | o | x | x | o | x | o | x | x | o |
| Jun | x | x | x | o | o | o | x | x | x | o | o | x | o | o | o | o | o | o | o | x | o | o | x | o | x | o | x | o |
| Jul | x | x | x | o | o | x | x | o | o | x | x | x | o | o | o | o | o | o | o | o | x | o | x | x | o | x | o | x |
| Aug | x | x | x | o | x | o | o | x | x | x | x | x | o | o | o | x | o | x | o | x | o | x | o | x | x | o | o | o |
| Sep | x | x | x | o | o | x | o | x | o | x | x | x | o | o | o | o | o | o | x | o | x | o | x | o | x | x | x | x |
| Oct | x | x | o | o | o | x | o | x | o | x | x | o | o | o | o | o | o | o | x | x | o | x | o | x | o | x | o | o |
| Nov | x | o | x | o | o | x | o | x | o | o | o | o | x | o | o | o | x | x | x | o | x | o | x | o | x | x | o | x |
| Dec | x | o | x | o | o | o | o | x | o | x | o | o | x | x | x | x | x | x | x | x | o | o | o | x | o | x | o | x |

இடமிருந்து வலமாகப் பெண்ணின் வயதும் மேலிருந்து கீழாக கருத்தரிக்கும் மாதமும் உள்ளது. உதாரணமாக 18 வயதுடைய பெண்ணுக்கு பெப்ரவரி மாதம் கருத்தரித்தது என வைத்துக் கொண்டால் பிறக்கும் குழந்தை ஆண் குழந்தையாக இருக்கும். X என்னும் குறியீடு ஆண் குழந்தையையும். O என்னும் குறியீடு பெண் குழந்தையையும் குறிக்கிறது. பீக்கீங் நகரத்தில் நுண்பொருட் காட்சி சாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது. இது கிரேக்க தேசத்தில் மன்னர் ஒருவரை புதைத்த குழியினுள் கண்டெடுக்கப்பட்டது. இதை ஆதாரமாகக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# குருதிப் பெருக்கு . முதலுதவி

குருதியானது கலங்கள், இழையங்கள், உறுப்புகட்குத் தேவையான உணவுப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கும், கழிவுப் பொருள்களைக் காவுவதற்கும் பயன்படுகின்றது. குருதியானது சராசரி மனித உடலில் 5.5L (8%உடல் நிறை) காணப்படும். வயது, பால் வேறுபாட்டுக்கு ஏற்ப மாறுபடலாம். குருதியானது, நாடி, நாளம் மயிர்க்குழாய்களினால் எடுத்துச் செல்லப்படுகின்றது. குருதியானது, குருதிக் கலன்களிலிருந்து வெளியேறலைக் குருதிப்பெருக்கு எனலாம். இவை உடலினுள், உடலுக்கு வெளியேயும் ஏற்படலாம். உடலினுள் ஏற்படும் குருதியிழப்பை உட்புறக் குருதியிழப்பு எனவும், உடலுக்கு வெளியே நிகழ்வதை வெளிப்புறக் குருதியிழப்பு எனவும் குறிப்பிடலாம்.

அசாதாரண இடங்களில் ஏற்படும் குருதியிழப்பு சிலசமயங்களில் மிக அதிகளவாகிய அதிர்ச்சியினை ஏற்படுத்தலாம். ஆகவே குருதிப் பெருக்கை இயன்றளவு கட்டுப்படுத்த வேண்டும்.இவற்றில் நாடியால் ஏற்படும் குருதியிழப்பு மிக ஆபத்தானவை. ஈற்றில் மரணங்கள் கூட ஏற்படலாம். ஆகவே குருதியிழப்பை உடன் நிறுத்த ஆவன செய்ய வேண்டும்.

குருதிப் பெருக்கின் போது முதலுதவியின் அடிப்படை நோக்கம்-

- ♠ குருதிப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்
- ♠ அதிர்ச்சி ஏற்படுத்தலைத் தவிர்த்தல்
- ♠ நோயாளியை வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கு ஆவன செய்தல்

## சிகிச்சை

- ♠ குருதிப்பெருக்கு ஏற்படும் பகுதியை இயலுமானவரை உயர்த்தி வைத்திருக்கலாம்.
- ♠ நேரடி அழுத்தத்தைப் பிரயோகித்தும் குருதியிழப்பைக் கட்டுப்படுததலாம்.
- ♠ அமுக்கும் ஸ்தானங்களில் அமுக்கத்தினைப் பிரயோகிக்கலாம்.
- ♠ அமுக்கங்களைப் பிரயோகிக்கும் போது 10 நிமிடத்திற்கு ஒருமுறை தளரவிடல் அவசியம்.
- ♠ மயக்க நிலயில் உள்ள நோயாளியை சுயநினைவு மீளும் நிலையில்படுக்க வைக்க வேண்டும்.
- ♠ விரைவில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லல்.

## பாரிய குருதியிழப்பு

பெருமளவு குருதியிழக்கும் சந்தர்பங்களில் நோயாளிக்கு அதிர்ச்சி ஏற்படலாம். நோயாளி நினைவிழக்க நேரிடலாம். முகம், கழுத்து போன்ற பகுதிகளில் ஏற்படும் குருதியிழப்பு சுவாசப்பாதையை தடை செய்யலாம். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அதிக குருதியிழப்பு முதலுதவியாளனையும் நிலைகுலைய வைத்து விடலாம். இருப்பினும் முதலுதவிப்படி முறைகளை (A,B,C) ஞாபகத்தில் கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

A - Ariway - சுவாசப் பாதையைத் திறத்தல்
B - Breathing - சுவாசமளித்தல்
C - Circulation - சுற்றோட்டதை சீராக்கல்

குருதியோட்டமானது மூளைக்குத் தொடர்ச்சியாக கிடைத்துக் கொண்டிருக்க வேண்டும். 5 நிமிடத்திற்கு குருதியோட்டம் தடைப்படும் குறைவடையும் நிலையில் மூளையின் தொழிற்பாடு மந்தமடைந்து நினைவிழக்க நேரிடலாம். நீண்டநேர இழப்பு மரணத்தைக் கூட தோற்றுவிக்கலாம் எனவே குருதியிழபபைக் கட்டுப்படுத்தல் மிகமிக அவசியமாகின்றது.

## உட்புறக் குருதிப்பெருக்கு

உடலினுள் ஏற்படுகின்ற இரத்தப்பெருக்குப் பின்வரும் காரணங்களால் ஏற்படலாம். *முறிவுகள் துளைக்கும் காயங்கள்* புறக்காரணிகள் ஏதுமின்றி உதாரணமாக *இரைப்பைப் புண்*

உடலினுள் ஏற்படும் குருதிப்பெருக்கு மிகவும் அபாயகரமானது உடலுக்கு வெளியே இழக்கப்படாத விடத்தும் சுற்றோட்டத்திலிருந்து அகற்றப்படுவதால் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது. குருதி தேங்குவதால் (உள்ளே) ஏற்படும் அமுக்கம் பாரதூரமான விளைவுகளை மூளை. நுரையீரல் போன்ற அங்கங்களில் ஏற்படுத்தும்.

## இத்தகைய சந்தர்ப்பங்களில்

விபத்தின போது அதிர்ச்சி ஏற்படுகின்ற சமயங்களில் வெளிப்படையான இரத்தப் பெருக்கு இன்றி அல்லது அடிபட்ட இடம் நிறமாற்றத்திற்குட்பட்டு கண்டல் காயங்களாக உடை அல்லது உடைந்த பொருள்களின் வடிவம் பொருந்தியதாக அமையலாம். உடலில் உள்ள வெளித் துவாரங்களில் குருதி அல்லது குருதி தோய்ந்த பாதிப்புற்ற உறுப்புக்கள் காணப்படலாம்.

## இனங்கண்டு கொள்ள உதவும் காரணிகள்

- உடல் வெளிறல் ♠ தாகம் ♠ குளிர்ந்த. ஈரலிப்பான தோல்.
- விரைவான ஆனால் பலவீனமான நாடித்துடிப்பு ♠ வலி
- மனக்குழப்பம். அமைதியின்மை. தளர்வு. மயக்கம்
- மோதல் காயங்களின் போது ஏற்படும் கண்டல் அடையாளங்கள்
- வெளித்துவாரங்களில் ஏற்படும் இரத்தப் பெருக்கு.
- நோயாளியைப் படுக்க வைத்து கால்களை உயர்த்தித் தாங்கும்படி செய்தல்.
- சுவாசம். நாடித்துடிப்பு. உணர்திறன் என்பன 10 நிமிடத்திற்கு ஒருமுறை பரிசோதிக்கப்பட வேண்டும்.
- வெளியேறும் குருதியின் தன்மை. அளவு. மூலம் அறியப்படல் வேண்டும் இயலுமாயின் குருதி மாதிரி நோயாளியுடன் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகமயம்

தினைத்துனை நன்றி செயினும் பனைத்துனையாக்
கொள்வர் பயன்தெரி வார

# நன்றி நவிலல்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எம்மை மீளாத்துயரில்
ஆழ்த்தி வானுறையும் தெய்வப் பதங்களை அடைந்த
எங்கள் குடும்பத்தின் அணையாவிளக்கு,
அன்புத்தெய்வம், குடும்பவிருட்சம்,
ஞானதீபம்,ஞானக்கொழுந்து

## அமரர். **காங்கேயநாதன் . விமலராணி**

அவர்கள்

இறைபதம் சேர்ந்ததை அறிந்து எமது அகம் தேடி ஓடோடி வந்து ஆறுதலும், தேறுதலும் கூறிய அன்புள்ளங்கள்
அனைவருக்கும்

உற்றார் உறவினர்கள்

நண்பர்கட்கும்,

உறவுக்கு அப்பால் வந்து உதவிகள் புரிந்தோருக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தோருக்கும், அகம்தனில் இருந்து உறவு காத்தோருக்கும்,

**மலர்வளையஅஞ்சலி செலுத்திய**

- யாழ் பல்கலைகழகம் - கணிதத்துறை,
- செலிங்கே இன்சுரன்ஸ் -சாவகச்சேரி

**கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட**

- செலிங்கே இன்சுரன்ஸ பிறைவற் லிமிட்டற், சாவகச்சேரி கிளை, முகாமையாளர், ஊழியர்
- கலைநகர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் விளையாட்டுக் கழகமும்
- கலைநகர் சித்தன்கேணி முன்பள்ளி இனைப்பாளர், ஆசிரியர்கள், வலிகாமம் மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தினருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

அஞ்சலி உரையாற்றிய

- ஆசிரியர் திரு.த.சண்முகலிங்கம் (வட்டு இந்துக்கல்லூரி.)
- முகாமைத்துவ உதவியாளர் திரு. ஆ.விஸ்ணுகுமார்
- ஆசிரியர் செல்வி .பே. ரோகிணி (மகளிர் கல்லூரி. உடுவில்)
- நேருஜி கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவர் திரு.இ.புலேந்திரதேவன்
- ஆசிரியர் திருமதி விக்ரர் (வட்டு இந்துக்கல்லூரி)
- கலாநிதி R.விக்கினேஸ்வரன்(கணித புள்ளிவிபரவியல் துறை யாழ் பல்கலைக்கழகம்)
- S.சிவஞானம் J.P
- பண்டிதர் ந. கடம்பேஸ்வரன்
- சைவப்புலவர் மா. கணநாதன்
- திரு த. சுதர்சன் முகாமையாளர் சிலிங்கோ நிறுவனம் சாவகச்சேரி
- அதிபர் இ. சத்தியவான் அறநெறிப் பாடசாலை, வடகொழும்பு

ஆகியோருக்கும்

அமரரின் இறுதிக்கிரியையின் போது வழக்கையாறு இந்து மயானம் வரை வந்து இறுதி அஞ்சலி செலுத்தியோருக்கும், இறுதிக் கிரியையில் பங்கு கொண்டோருக்கும், அந்தியேட்டிக் கிரியை ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்கு கொண்டோருக்கும் கிரியைகளை சிறந்த முறையில் நிறைவேற்றிய சிவாச்சாரியார் கட்கும். இம்மலரை அச்சிட உதவியோருக்கும், அழகுற வடிவமைத்த கஜன் கொம்பியூட்டர் பிறிண்டேஸ் ஸ்தாபனத்தினருக்கும்

## எமது நன்றி!



"குமரகோட்டம்"
கலைநகர்,
சித்தன்கேணி

குடும்பத்தினர்

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மானப் பெரிது

பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலின் பெரிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Beauty of Life

"Within, you can feel
the endless moment -
out of nowhere
into somewhere
and then out again
into nowhere -
one breath at a time."

**Maharaji**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின் தையற்
கலை வண்ணங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு

(செந்தில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகையா

தம்பு

தில் (முருகையா ஸ்தாபகர்)

பொன்னர்

சரவணமுத்து

குழந்தைவேலு

ா

தவமணி

கந்தையா

வீரபத்திரர் இரத்தினம் சரவணமுத்து

அப்பா
(வைத்தியர்)

கந்தையா

இராசவைத்தியர்
குமாரசாமி

Dr காசிப்பிள்ளை

**மாணிக்கம்**

சிவஞானவதி

புஸ்பவதி(அமரர்) இரத்தினாவதி இராசமலர் **விமலராணி**



**ரன்**

**ரதி**

**தா**

**கமலன்**

**உமையாள்**
+
**நீலவண்ணன்**

**தனுசா**
+
**கேதீசன்**

# வம்சாவழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org